பக்கங்கள் : பன்னிரண்டு

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 21 செவ்வாய்க்கிழமை (07.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 314

இந்தியாவின் எச்சரிக்கைக்கு இலங்கை மசியாவிடில் மத்திய அரசின் ஆட்சி வேண்டுமா என தி.மு.க. தீர்மானிக்கும்

தமிழக முதல்வர் கருணாநிதி எச்சரிக்கை

சென்னை, ஒக்.07

இந்திய மத்திய அரசில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் விலக நேரிடும் என்று தமிழக முதல்வர் கருணாநிதி கடும் தொனியில் எச்சரித்துள்ளார்.

ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அர சாங்கம் நடத்தும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்ற இந்திய(மத்திய) அரசின் எச்சரிக்கைக்கு அந்த நாடு செவிசாய்க்கா விடில்- மத்திய அரசு தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டுமா என்பது குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் மறு பரிசீலனை செய்யும்.

மயிலாப்பூர், மாங்கொல்லையில் இலங்கைத் தமிழர்கள் அந்த நாட்டின் அரச படை களால் கொலைசெய்யப்படுவதை கண்டித்து நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியின் பின்னர் நடை பெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே (12ஆம் பக்கம் பார்க்க)

அ'புரத்தில் தற்கொலைத் தாக்குதல்;

ஜானக பெரேரா உட்பட 28 பேர் பலி!

ஐ.தே.கவின் புதிய அலுவலகத் திறப்பு விழாவில் கோரம்!!

அநுராதபுரம், ஒக்ரோபர் 7

அநுராதபுரத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில், ஐக்கிய தேசியக் கட்சியின் வடமத்திய மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் இராணுவ உயர் அதிகாரியுமான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கொல்லப்பட்டார்.

அவருடன் அவரது மனைவி, ஐ.தே.கட்சியின் முக்கியஸ்தரான டாக்டர் ஜோன் புள்ளே, அவரது மனைவி, இரு சட்டத்தரணிகள், மரகாணசபை உறுப்பினர் மற்றும் ஊடகவியலாளர் ஒருவர் உட்பட மொத்தம் 28 பேர் பலியாகியிருக்கின்றனர். 80 பேர் வரை படுகாயமடைந்தனர். (12ஆம் பக்கம் பார்க்க)

அரசும் கோத்தபாயவுமே முழுப் பொறுப்பு!

ஐ.தே.க.வினர் ஆட்சேபம்

கொழும்பு, ஒக். 07

மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் படுகொலைக்கு அரசும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுமே பொறுப்பு என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் (12ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் மீது அரசு குற்றச்சாட்டு!

கொழும்பு, ஒக். 07

ஜானக பெரேரா உள்ளிட்டவர்கள் மீது நேற்று நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலை அரசு வன்மையாகக் கண்டித்துள்ளது.

வடக்கில் படையினரின் தாக்குதல்களை எதிர்கொள்ளமுடியாத புலிகள் தெற்கில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான் தாக்குதலை நடத்துகின்றனர் என அரசு தெரிவித்துள்ளது.

அரசின் சார்பில் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவே இந்தக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரி (12ஆம் பக்கம் பார்க்க)

பயங்கரவாதத்தை ஒழிக்க அனைவரும் ஒன்றிணைக! அ'புர குண்டு வெடிப்பு அவசியத்தை உணர்த்துகிறது

மாத்தறையில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.07

''நாட்டில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளின் வெற்றிக்காக எல்லோரும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை அநுராதபுரத்தில் இடம்பெற்ற புலிகளின் தற்கொலைத் தாக்குதல் உணர்த்துகின்றது''

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார். நேற்று மாத்தறை, உயன்வத்தையில் காணியற்றோருக்கு காணிகளை வழங்கும் வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்தும் (12ஆம் பக்கம் பார்க்க)

கருணா அரச எம்.பியாகிறார்

கொழும்பு, ஒக்.7

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் விநாயக மூர்த்தி முரளிதரன்(கருணா) இன்று அரசதரப்பு உறுப்பினராகப் பதவி ஏற்கிறார்.

வடமத்திய மாகாண சபைத் (12ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில் விமானத் தாக்குதல்

கிளிநொச்சி, ஒக். 07

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சிப் பகுதி மீது நேற்று முற்பகல் 11.15 மணியளவில் விமானப்படையினரின் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின. (12ஆம் பக்கம் பார்க்க)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம்

இரதோற்சவம்:
08.10.2008 புதன்கிழமை
வசந்த மண்டபப் பூஜை காலை 08.00 மணி
ஆரோகணம் காலை 10.00 மணி

தீர்த்தோற்சவம்:
09.10.2008 வியாழக்கிழமை
வசந்தமண்டபப் பூஜை காலை 8.30 மணி
தீர்த்தோற்சவம் காலை 10.00 மணி

சுமங்கலி தீப பூஜை
14.10.2008 செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 02.30 மணி
கலந்துகொள்ளவுள்ள அடியவர்கள் தங்கள் பதிவுகளை உறுதிசெய்து கொள்ளவும்.

இப்பெருவிழாவில் அடியார்கள் அனைவரையும் கலந்து நாராயணனின் பேரருள் பெற்று நிறைவாழ்வு வாழவேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பிரம்படி மின்மாற்றி மீதான கைக்குண்டுத் தாக்குதல்

பல்கலை. மாணவன் உட்பட கைதான மூவரும் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி

யாழ்ப்பாணம், ஒக்.7

கொக்குவில் பிரம்படிப் பகுதியில் மின்மாற்றி மீது கடந்த வியாழக்கிழமை கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்தை அடுத்து படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதான மூவரையும் தலா 20ஆயிரம் ரூபா பிணையில் செல்ல யாழ்.நீதிமன்றம் அனுமதித்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட இறுதியாண்டு மாணவனான பாலசுப்பிரமணியம் பிரகலாதன் மற்றும் நா.இராஜேஸ்வரன், ம.உதயகுமார் ஆகியோர் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் மூவரும் யாழ். நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் பல்கலைக்கழக மாணவன் தொடர்பாக பிணை மனு ஒன்று யாழ். நீதிவான் இ.வசந்தசேனன் முன் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

இறுதியாண்டுப் பரீட்சை நடைபெறுவதால் அதில் தோற்ற வசதியாக பிணை வழங்குமாறு அந்த மனுவில் கோரப்பட்டது. அவரையும் மற்றும் இருவரையும் பிணையில் அனுமதிக்க ஆட்சேபம் இல்லை என்று பொலிஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

மூவரையும் தலா 20 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இட வேண்டும் எனவும் உத்தரவிட்டார். (அ-1)

சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் சுன்னாகத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் அனுசரணையுடன் உடுவில் பிரதேச செயலகம் நடத்தும் சிறுவர், முதியோர் தின விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு சுன்னாகம் பிரதேச சபை பொது நூலகத்தில் நடைபெறும்.

உடுவில் பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவியின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.7

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய ஆசிரியர் தின விழாவும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாராட்டும் நிகழ் வும் இன்று காலை 9.30 மணிக்கு பழைய மாணவன் றா.நவராஜ் தலைமையில் வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு மதி வ.சிவபாலனும், சிறப்பு விருந்தினராக கிராம சேவையாளர் செல்வி இ.கமலவேணியும் கலந்து கொள்வர்.

இளைப்பாறிய இ.போ.ச ஊழியர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக். 7

இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர் பணிக் கொடை நிலுவை தொடர்பான வழக்கு விசாரணை நாளை புதன் கிழமை நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. எனவே பணிக்கொடை நிலுவையில் உள்ள ஊழியர்கள் நாளை காலை 9மணிக்கு யாழ். பஸ் நிலையத்துக்குச் சமுகம் தரும்படி இளைப்பாறிய ஊழியர் சங்கம் கேட்டுள்ளது. (50)

கொக்குவில் வர்த்தகர் ஆணைக்குழுவில் சரண்

யாழ்ப்பாணம், ஒக்.7

கொக்குவிலைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் உயிர் அச்சுறுத்தல் எனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்றுச் சரண் அடைந்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய இவரை பாதுகாப்பாகத் தங்க வைக்க ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ளது. (அ-1)

சாதனைச் சிகரங்கள் வாழியவே!

கீர்த்தி மிக்க சாதனைகளை
நேர்த்தி நல் போதனைகளால்
சேர்த்த நின் புலமையின் பால்
ஈர்த்த எம் மனங்களில் பூத்ததோர்
வாழ்த்திதனில் உவந்து வாழ்த்துகின்றோம்

பாழையமாணவர் சங்கம்,
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

31ஆம் நாள் இதய அஞ்சலிகள்

எமது நண்பர்
திரு.சூரியகுமார் அவர்களின்
பாசமிகு தாயார்
திருமதி நல்லம்மா செல்லையா

மாதம் ஒன்று கழிந்தாலும்
மாறவில்லை எம் துயரம்
கூடி நீங்கள் வாழ்க்கையிலே
கொண்ட அன்பு குறையவில்லை

அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கும்

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (79071) நண்பர்கள்.

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு. நாகமணி தவேந்திரராசா அவர்களின் பாசமிகு தாயார்

நாகமணி தவமலர்

அவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா/உயரப்புலம் மெதடிஸ்த மிசன் த.க.வி.
ஆனைக்கோட்டை.

(79069)

ஏடு

விஜயதசமியன்று ஏடு தொடக்குவதற்கு, ஏடு எம்மிடமிருக்கின்றது. தொகையாக தேவையானோர் ஆதாரத்துடன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கிறோம்.

அண்ணா தொழிலகம்,
இணுவில்.

விற்பனைக்கு

இத்தாலி வெஸ்பா ஸ்கூட்டர், பிளாஸ்ரிக் கதிரை, கட்டில் (டபிள்பெட்), 100W அம்ப், 2 Box 10'' என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: சி.சி.நாதன்
இல 16/3, விதானையார் வீதி,
கண்டிக்குளி,யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776146434

வாடகைக்கு

இல 101, ஸ்ரேசன் வீதி, கொக்குவில் (மருத்துவபீடத்திற்கு அண்மையில்) மாடிவீட்டின் மேற்பகுதி வாடகைக்கு உண்டு. பல்கலைக் கழக மாணவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: இல 101, ஸ்ரேசன் வீதி, கொக்குவில்.

காணவில்லை

சிறிய கொம்பும், முகத்தில் சுருமை நிறமுடைய A.C இன கட்டை மாடு 04.10.2008 தொடக்கம் காணவில்லை. தயவு செய்து கண்டவர்கள் அறியத்தரவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: இ.ஜெயசுந்தர சேகர் (பஞ்சலிங்கம்) பண்டாரக் குளம் இசை மன்றம், 852/19, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொ.பே. 0774064031

DV 2010க்கான அமெரிக்கா லொத்தர் விசா

DV 2010 அமெரிக்கா லொத்தர் விசாவிற்கான விண்ணப்பங்களை எமது நிறுவனத்தினூடாக அனுப்பிக்கொள்ளப்படும். மற்றும் இதற்கான மேலதிக விபரங்களை எமது நிறுவனத்தினூடாக நேரில் தொடர்பு கொள்ளவும்.

திருமுருகன் கொம்யூற்

மகளிருக்கான 3 மாத பயிற்சிகள்

கலாலயா
பயிற்சியகம்
வருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய வகுப்புக்களில் சனி, ஞாயிறு பிரிவுகளில் கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், தையற் பயிற்சிகளுக்கும், கிழமை நாள் பிரிவுகளில் தையல், பற்றிக் வர்ணம் தீட்டுதல் பயிற்சி களுக்கும் மேலும் குறிப்பிட்டளவு புதிய மாணவிகள் உடன் அனுமதிக்கப் படவுள்ளனர்.

அலுவலக நேரம் பி.ப 3.00 மணியளவில் – அந்தி நேரங்களில்

சேவை நலன் பாராட்டு

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ச. சிவகுமாரன் அவர்களின் 25 வருட சேவையைப் பாராட்டும் விழா கல்லூரியில் நேற்று (06.10.2008) திங்கட்கிழமை இனிதே இடம் பெற்றது. அவரது சேவை தொடர்ந்து சிறப்பாகத் தொடர வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி. (அ/555021) ஆசிரியர் கழகம்,

மரண அறிவித்தல்கள்

திருமதி நாகமணி தவமலர்

கெனடிலேன், திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி தவமலர் 06.10.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், நாகமணியின் அன்பு மனைவியும் தவராணி, சிவராணி (மன்னார்), தவேந்திரராசா (ஆசிரியர், உயரப்புலம் மெ.மி.த.க.பா), சிவகுமார் (டோகா), கார்த்திகா (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் முருகராசா, பிலிப், ஜெயகௌரி, அனுஷா, குகதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் மாணிக்கம், சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சங்கவி, யோகீசன், ஷாமிலி, முகுந்தன், தனுசன், நிதுர்சனா, அனோஜா, பானுஷா, மனோஜ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.10.2008) புதன் கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கெனடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. (79068)

தகவல்: வ.நாகமணி (கணவர்)

சுந்தரம்பிள்ளை அருளம்மா

சாவகச்சேரி வடக்கு, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை அருளம்மா நேற்று (06.10.2008) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் சண்முகம், தியாகராசா, அரசம்மா ஆகியோரின் சகோதரியும் நடராசா, கால்ஞ்சென்ற சுப்பிரமணியம், இராசம்மா, காசிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் சுந்தரம்பிள்ளையின் அன்பு மனைவியும் ரஞ்சிதமலர், திரவியநாதன் (சுவிஸ்), இராசமலர் (சுவிஸ்), வசந்தமலர் (சுவிஸ்), சந்திரமலர் (பிரான்ஸ்), இராசகுமார் (பிரான்ஸ்), உதயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் குணசேகரம், சிவமதி (சுவிஸ்), ஈஸ்வரலிங்கம் (சுவிஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), சந்திரகுமார் (பிரான்ஸ்), மொறியல் (பிரான்ஸ்), குலமகள் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோபன், இளங்கோபன் (சுவிஸ்), திலக்சன், கிசாந்தி, திவ்வியன் (சுவிஸ்), தமிழினி, செந்தூரன், ராயினி (சுவிஸ்), பிரவினா, அஞ்சுதி, அருளினி (சுவிஸ்), சர்மினி, சர்மிலி (பிரான்ஸ்), மொனியா, மைவா, தேயோ (பிரான்ஸ்), அபிசன், அபிசனா, அபிரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2008) செவ்வாய்க்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடத்தடி, சாவகச்சேரி. (A)

தகவல்: சி.குணசேகரம் (மருமகன்).

சுப்பிரமணியம் திருச்செகநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், அளவெட்டி, அமரர் அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்களின் மருமகன்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சு.திருச்செகநாதன் நேற்று (06.10.2008) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஆசிரியர்)- வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான அருட்கவி சீ.விநாசித்தம்பி (புலவர்) - அன்னம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்ரீரங்கநாயகியின் அன்புக் கணவரும் வரோதயன் (பூசகர், நாராயணர் தேவஸ்தானம், அளவெட்டி- ஆசிரியர், சர்வோதயம், யாழ்ப்பாணம்.), வரதவாணி (ஆசிரியர், மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கமலம், சேசோதி காந்தன் (ஆசிரியர், முல்லைத் தீவு) ஆகியோரின் சகோதரனும் கு.அருந்ததி (தலைவர், நாராயணர் தேவஸ்தானம்), ஸ்ரீதரன் (கனடா), சிவலிங்கராணி (பிரான்ஸ்), சிவகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகேஸ்வரம், அளவெட்டி. (79070)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி தும்பளை நெல்லண்டை அஞ்சலிஅகம் நடத்திய சிறுவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. சிறுவர்களின் நடன நிகழ்வுடன் விருந்தினர்கள் மேடைக்கு அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், சிறார்களின் கலை நிகழ்வுகளை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

ஆஸ்பத்திரி வீதியின் நடைபாதைக் கடைகள் அகற்றப்பட்டன

நல்லூர், ஒக்.7

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இருந்து வந்த நடைபாதைக் கடைகள் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் அங்கிருந்து அகற்றப் பட்டுள்ளன.

யாழ்.மாநகரசபைப் பகுதியில் பொலிஸ் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் போக்குவரத்து விதிமுறைகளை அடுத்தே இந்த நடைபாதைக் கடைகள் அகற்றப்பட்டுள்ளன.

வீதிப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் பொலிசார் பொதுமக்களை நடைபாதையைப் பயன்படுத்துமாறும் அதன் மூலம் வாகனப் போக்குவரத்தைச் சீராக்கும் விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்றும் பாதசாரிகளிடம் கூறிவருவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

நடைபாதைக் கடைகள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரியின் முன்பாக வீதிப் போக்குவரத்து சீராக நடைபெறுவதைக் காணக் கூடியதாக இருந்தது. (202-111)

வல்லிபுரம் அரச காணிகளில் 50 குடும்பங்கள் குடியமர்த்தப்படுவர்

யாழ்ப்பாணம், ஒக்.7

வல்லிபுரம் பகுதியில் உள்ள அரச காணிகளில் மேலும் 50 குடும்பங்களைக் குடியமர்த்தப் பருத்தித்துறைப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மணற்காடு வல்லிபுரம் பிரதேசத்தில் சிறந்த நன்னீர் வளம் காணப்படுகின்றது. அதன் காரணமாக இங்கு குடியிருப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இதனைக் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட பிரதேசத்தில் நன்னீர் வளம் காணப்படும் 56 ஹெக்டேயர் எல்லைக்கு வெளியேயே காணிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதியை பருத்தித்துறைப் பிரதேச செயலர் வடக்கு மாகாண சபையிடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-236)

வல்லிபுர ஆழ்வார் ஆலய புனரமைக்கப்பட்டதேர் வெள்ளோட்ட விழா

வடமராட்சி, ஒக்.7

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் புனரமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

50 வருடகால பழமை வாய்ந்த இத் தேரில் பல திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, தேரின் சில பாகங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டது.

புனரமைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து வெள்ளோட்டம் இடம்பெறவுள்ளது. (202-111)

யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வாழ்க்கைச் செலவுப்படியை அதிகரித்துள்ளது

யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது பணியாளருக்கான வாழ்க்கை செலவுப்படியை இரண்டாயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரி வித்தார்.

வாழ்க்கைச் செலவீனங்களின் அதிகரிப்புக் காரணமாக சங்கப் பணியாளர்களின் இக்கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டிருப் பதாக தெரிவிக்கப்பட்டது.

முன்னர் ஆயிரத்தி 875 ரூபாவாக வழங்கப்பட்ட இந்த வாழ்க்கைச் செலவுப்படி தற்போது இரண்டாயிரம் ரூபாவாக இந்த மாதத்தில இருந்து வழங்கப்படவுள்ளது.

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட இந்த சுற்று நிருபத்திற்கு அமைவாக இந்த வாழ்க்கை செலவுப் படியை சங்கங்கள் பணியாளர்களுக்கு வழங்கவேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (203-224)

வலி.கிழக்கு பிரதேச நூலகங்களுக்கு புத்தகங்கள்

கோப்பாய்,ஒக்.7

வலி.கிழக்கு பிரதேச சபை அச்சுவேலி, உரும்பிராய் பொது நூலகங்களுக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்து வழங்கியுள்ளது.

4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களே கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளன. (202-72)

நவீன தொழில்நுட்ப அறிவியல் யுகத்தில் ஆங்கில மொழித் தேர்ச்சி மிக அவசியம்

ஆங்கில மொழி உதவிக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஒக்.7

நவீன தொழில்நுட்ப அறிவியல் யுகத்தில் ஆங்கில மொழித் தேர்ச்சி இல்லாவிடில் இயல்பு நிலையில் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. என்வே மாணவர்கள் காலத்தின் தேவையைக் கருத்தில்கொண்டு ஆங்கில மொழிக் கல்வியை ஆர்வத்தோடு கற்று தேர்ச்சி அடைய வேண்டும்.

இவ்வாறு கூறினார் யாழ்.கல்வி வலய ஆங்கில மொழிப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தியாகராசா.

அச்சுவேலி மத்தியகல்லூரியில் நடைபெற்ற ஆங்கிலமொழி முகாமை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: ஆங்கில மொழிப்பாடத்தை மாணவர்கள் வெறுப்பதற்கும், பரீட்சைகளில் உரிய பெறுபேற்றை அடையாமைக்கும் மாணவர்களுக்கு ஆர்வத்தை தூண்டும் விதத்தில் கற்பிக்காத சூழ்நிலையே காரணம்.

மாணவர்களுக்கு ஏற்ற வகுப்பறையில் பாடத்துறைகளை கற்பிக்கும்போது மாணவர்கள் ஆர்வத்தோடு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் குறித்த பாடத்துறையில் உயர் அடைவுமட்டத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கற்பித்தல் தொடர்பான நடைமுறை ஒழுங்குகளில் காணப்படும் குறைபாடுகள் தான் மாணவர்களை ஆங்கில மொழிப் பாடத்தின்மீது அக்கறை கொள்ளாமல் செய்வதுடன் ஆங்கில மொழியின் பரீட்சை பெறுபேறுகளிலும் வீழ்ச்சி நிலையை ஏற்படுத்திவிடுகின்றன.

ஆங்கில மொழிப்பாடம் குறித்த பாடவிடயங்கள் தொடர்பாக ஆசிரியர்களையும் விழிப்புணர்வுக்கு உள்ளாக்குவதுடன் மாணவர்களையும் குறித்த பாடவிடயத்தில கருத்தூன்றிக் கவனம் செலுத்த வைக்கவேண்டும்.

இது உயர் அடைவுமட்டத்தை அடைவதற்கு வகை செய்யும் என்பதில் அசைக்காத நம்பிக்கை கொள்ளலாம்.

இந்த வகையில் ஒவ்வொரு தவணையும் ஒன்றுக்கு மேற்பட்ட முகாம்களை கட்டாயம் உருவாக்கிச் செயற்படுத்த வேண்டிய கட்டாயமாகும்-என்றார். (203-11)

நவராத்திரி நிகழ்வுகள்

காரைநகர், ஒக்.7

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி விரதத்தை ஒட்டி தினமும் பி.ப 4 மணி தொடக்கம் விசேட அபிஷேக பூசை வழிபாடுகளும் பஜனைகளும் இடம்பெற்று வருகின்றன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணி முதல் விசேட அபிஷேக ஆராதனைகளும் மாலை 6 மணிக்கு மானம்பூ திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201-250)

* * * *

கட்டைவேலி, ஒக்.7

அல்வாய் மேற்கு திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலய வாணி விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை முற் பகல் 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி ஸ்ரீநிதி சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி க.பஞ்சலிங்கம், பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் ஆகியோர் கலந்துகொள்வார்கள் (201-275)

* * * *

நல்லூர், ஒக்.7

நெடுந்தீவு மேற்கு மங்கையற்கரசி வித்தியாசாலையில் நவராத்திரிவிழா நாளை புதன்கிழமை வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. விழாவில் நவராத்திரி விரதம் குறித்த சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (201-111)

* * * *

யாழ்ப்பாணம், ஒக்.7

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரியை முன்னிட்டு தினமும் காலை 8 மணி முதல் அம்பாளுக்கு அபிஷேகமும் விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப 4 மகிடாசுரன் போரும் மாலை மறுநாள் மாலை 5 மணிக்கு மானம்பூ திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201)

* * * *

கோப்பாய், ஒக்.7

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளியின் வாணி விழாவும், பெற்றோரால் நடத்தப்படும் ஆசிரியர் கௌரவிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

விழாவில் பாலர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (201)

* * * *

யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கத் தலைவர் ப.கிரிதரன் தலைமையில் நடை பெறும்.

சங்கத்தின் கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவில் விசேட பூசை வழிபாடு,சிறப்பு சொற்பொழிவு ஆகியவை இடம்பெறவுள்ளன. (224-201)

* * * *

யாழ்.மத்திய கல்லூரியின் வாணி விழா நிகழ்வுகள் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு தலைவர் பு.நிரோஷன் தலைமையில் கல்லூரி தம்பர் மண்டபத்தில் இடமபெறவுள்ளன

நிகழ்வில் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு நிகழ்வாக சிரேஷ்ட இந்து சமய ஆசிரியர் ப.ஜெகநாதன் பாராட்டிக் கௌரவிக்கப்பட வள்ளதுடன் "மத்திய வாணி" நூல் வெளியிடும் இடம்பெறும். (201)

குடாநாட்டின் பிரதேச செய்திகள்

கைதடி முதியோர் இல்லத்தில் இன்று இறுதிநாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.7

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் இடம்பெற்றுவரும் முதியோர் தின விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன.

இன்றைய நிகழ்வு சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் பிரதம விருந்தினராகவும் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் இல்ல முதியோர் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விசேட நிகழ்ச்சியாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவியர்களின் குழு நடனம், குழுப்பாடல், யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களின் பட்டிமன்றம் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் முதியோர் தின நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. (203-224)

பருத்தித்துறையில் பின்தங்கிய கிராம மக்களுக்குக் கோழிக்குஞ்சுகள்

வடமராட்சி,ஒக்.7

யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மூன்று பின்தங்கிய கிராமங்களில் தலா பத்துப் பேருக்கு நல்லினக் கோழிக் குஞ்சுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

அல்வாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மகாத்மா வீதி, புலோலி மேற்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பூவக்கரை, புலோலி வடகிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கூழாவடி ஆகிய பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கே இவை வழங்கப் பட்டன என பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்தார். (202-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கற்கோவளத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு கரித்தாஸ்- கியூடெக் நிறுவனம் 70 வீடுகளை யும், 39 மலசல கூடங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளது.

இவற்றை வைபவரீதியாகக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை கரித்தாஸ்-கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் அருட்பணி கி.யோ. ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் யாழ்.ஆயர், பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் ஆகியோர் பயனாளிகளுக்கு திறப்புகளைக் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்-சுந்தர்)

வட மாகாணக் கல்விச் சமூகத்தின் தரவுகள் விரைவில் இணையத்தளத்தில்

யாழ்ப்பாணம்,ஒக்.7

வடக்கு மாகாணத்தில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகள் தொடர்பான தகவல்களைக் கொண்ட இணையத்தளம் ஒன்றை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோ நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள கல்விப் பணிப்பாளர்களுடன் செய்மதி மூலம் கலந்துரையாடினார்

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் அவற்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள் தொடர்பான தரவுகளை பேணுவதற்கென இந்த இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வடமாகாணக் கல்விச் சமூகம் தொடர்பான முழுமையான தகவல்களைப் பெற் றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப் படுகின்றது.

இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாணக் கல்விச்சமூகம்தொடர்பானதகவல்களைத்திரட்டுமாறு வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணத்தில் உள்ள கல் விப் பணிப்பாளர்களைப்பணித்துள்ளார். (50)

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு தென்னிந்தியத் திருச்சபை உதவி

யாழ்ப்பாணம்,ஒக்.7

வன்னியில் இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கு தென்னிந்தியத் திருச்சபை உதவிகளை வழங்கி வருகின்றது. இதற்கென 10 லட்சம் ரூபா நிதி தென்னிந்தியத் திருச்சபையின்வண்ணிக்கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருவையாறு, அக்கராயன் ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து தரும்புரம், உடையார்கட்டு, விசுவமடு, சுதந்திரபுரம் ஆகிய இடங்களில் தங்கியுள்ள 3ஆயிரம் குடும்பங்களுக்கு அவர்கள் இடம்பெயர்ந்து செல்வதற்கான வாகனப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்துள்ளதுடன் தலா ஒவ்வொரு குடும்பத்தின் உலர் உணவுத் தேவைக்கென 2 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இதனைவிட இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு மேலும் உதவிகளை வழங்குவதற்குத் தென்னிந்தியத் திருச்சபை நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளது. (50)

சங்கானையில் கற்றிவளைப்புத் தேடுதல்

சங்கானைப் பகுதியில் சகல இடங்களிலும் பாதுகாப்புப்படையினரால் நேற்று சுற்றிவளைப்பு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

சங்கானைச் சந்தை, வீடுகள், பிரதேச செயலகம், வர்த்தக நிலையங்கள் யாவும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன. சகல வீதிகளிலும் பாதுகாபபுப் படையினர் நின்று அவ்வழியால் வரும் சகலரையும் சோதனைக்குட்படுத்தியதோடு, சங்கானை பஸ் நிலையத்திற்கு செல்லுமாறு பணித்தனர். அங்கு நூற்றுக்கும் மேற்பட்டோர் காலை 8.30 மணி முதல் 2 மணிவரை சோதனைக்குட்படுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

அத்துடன் சகல வாகனங்களும் மறிக்கப்பட்டுசோதனை செய்யப்பட்டன. (202-29)

யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

உள்ளத்து உவகையுடன் வாழ்த்துகின்றோம்

சண்டிலிப்பாய் இந்துத்தாயின்
பதின்மூன்று முத்துக்கள்
பல்கலைக்கழகங்களில்
பயிலவெனச் செல்கின்றார்கள்

1.செல்வி இரவீந்திரகுமார் மீரா
2.செல்வி சில்வெஸ்டர் சாதனா
3.செல்வன் துரைராஜா சுகிதரன்
4.செல்வன் மகாதேவன் ரகுநாதன்
5.செல்வி கணேசன் அருள்மதி
6.செல்வி ஸ்ரீதரன் ஸ்ரீமதி
7.செல்வி நாகராஜா கார்த்திகா
8.செல்வி நாகராஜா சத்தியசீலா
9.செல்வி சோமசுந்தரம் கௌசிகா
10.செல்வன் சிவசுப்பிரமணியம் ஜெயதீபன்
11.செல்வன் குலசிங்கம் ரஜீத்
12.செல்வன் செல்வநாயகம் ராஜிஸ்ரன்
13.செல்வன் செல்வராசா பிரியந்தன்

எண்ணியவாறு ஏற்றமான கல்விபெற்று
அகிலமெங்கும் புகழ்பரப்ப வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம் - யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

என்றென்றும் எங்கள் இதய நன்றிகள்

எமது குடும்ப ஒளி விளக்காய்த் திகழ்ந்த

அமரர் தம்பையா நடராசா

அவர்களின் ஆத்மா
சிவகதியடைந்ததை அறிந்து
அனுதாபச்செய்தி வழங்கியோருக்கும்
உடன் வந்து உதவிசெய்தவர்களுக்கும்
மற்றும் தொலைபேசி மூலம்
அனுதாபச்செய்திகளை
தெரிவித்தவர்களுக்கும்
கண்ணீர்அஞ்சலிப்
பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும்
மலர்வளையங்கள் வைத்தவர்களுக்கும்
மற்றும் ஏனைய உதவிகளைச்
செய்துதவியவர்களுக்கும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப்
பிரார்த்தனையில கலந்து கொண்டவர்களுக்கும் உற்றார், உறவினர்,
நண்பர்கள், அனைவருக்கும் எமது நன்றிகள்.

இல. 171/ 06, பருத்தித்துறை வீதி, நல்லூர்
(மனோன்மணி அம்மன் கோவில் அருகில்)

எஸ்.சத்தியரூபன்
(மகன் – சிறிநதியா நகைமாடம்)
கே.செல்லத்துரை
(மருமகன்– சோபனா நகைமாடம்)
மகள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.7

வடமாகாண சாரணர் ஜம்போரியும் குருளைச் சாரணர் கப்போரியும் இன்று தொடக்கம் தொடர்ந்து 3 தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

இதனையொட்டிய ஒழுங்கமைப்புக் குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது. (202)

IBMS

கணனிக்கற்கை நெறிகளுக்கான
புதிய பிரிவு ஆரம்பம்.

விஜய தசமி அன்று
அனைத்து Diploma
கணனிக்கற்கை
நெறிகளுக்கான புதிய பிரிவு
ஆரம்பம்.

இப்பிரிவுகளுக்கு பதிவினை
மேற்கொள்ளும் மாணவர்களுக்கு
விசேட
கட்டணச்சலுகை வழங்கப்படும்

ஆரம்பம்:-09/10/2008 காலை 10.00மணி

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES

Special Offer! Special Offer! Special Offer!

B. Sc. in Computer Science

சரஸ்வதி தேவியின் அருளுடன்
சர்வதேச அங்கீகாரமுடைய
உங்கள் மண்ணிலேயே
உங்கள் பெற்றோரின் முன்னிலையிலே

கணினிப்பட்டதாரியாக அரிய சந்தர்ப்பம்!

பட்டப்படிப்பு முழுவதும் இங்கேயே பயில முடியும்

பரீட்சைகள் யாவும் இங்கேயே நடைபெறும்

ஆம்!!!
விஜயதசமியன்று
பதிவு செய்பவர்களுக்கு.....

பதிவுக் கட்டணம்
ரூபா 10000
முற்றிலும் இலவசம்!!!

பதிவு செய்யும் நேரம் 9:00 - 2.00 மணிவரை (பதிவுகள் சங்கானையில் மட்டும்)
யாழ்ப்பாணத்தில் அல்லது சங்கானையில் கற்கைநெறியைத் தொடர முடியும்

எமது Administrative Advisor Prof.Dr.A.Shanmugadas அவர்களின் வழிகாட்டலில்

North Lanka IIT
Main Street, Chankanai. 060 221 4305

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க. பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெற்றோரின் பங்களிப்பு அவசியம்

1915ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க பாடசாலை சுழிபுரம் கிழக்கில் வசிக்கும் பெரும்பாலானோர் தமது ஆரம்பக்கல்வியைக் கற்ற, கற்கின்ற பாடசாலையாக விளங்கிவருகின்றது. இதன் தற்போதைய நிலைபற்றி பாடசாலை அதிபர் திருமதி செ.செல்வராணியுடன் உரையாடியபோது பின்வரும் கருத்துகளை அவர் குறிப்பட்டார்.

வலிகாமத்தின் மாபெரும் இடப்பெயர்வுக்கு (1995ஆம் ஆண்டு) முன்பு வருடா வருடம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் சித்தியெய்தி வந்துள்ளனர்.

இடப்பெயர்வுகளின் பின்னர் இதுவரை மேற்படி பரீட்சையில் (1997-2008 வரை) 14 மாணவர்கள் மட்டுமே சித்தியடைந்திருக்கின்றனர். இவ்வாண்டும் மாணவர்களான செல்வன் த.மோகனரூபன், செல்வி க.கவிதா ஆகியோர் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இப்பாடசாலையில் தரம் 1 முதல் 5 வரையான வகுப்புகள் இருக்கின்றன. 70 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். அதிபர் மற்றும் 3ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். இங்கு முன்பு ஆறாம் வகுப்பு வரை வகுப்புகள் நடைபெற்றதாகவும் பின்னர் இதற்கு அண்மையாக வேறொரு பாடசாலை இருப்பதால் இதன் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு ஆறாம் வகுப்பு நிறுத்தப்பட்டு தற்போது தரம் 5 வரையான பாடசாலையாக இது இயங்கி வருகின்றது.

இடப்பெயர்வின் பின்னர் மீள ஆரம்பிக்கப்பட்டு இரு தினங்களில் பாடசாலை மூடப்பட்டு (அப்போது அதிபரோ, ஆசிரியர்களோ இல்லாத காரணத்தினால்) 1996ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டு ஆறு மாதங்களாக வகுப்புகள் நடைபெற்றன. பின்னர் மீண்டும் பெற்றோர்களின் (பழைய மாணவர்கள்) முயற்சியினால் அதே ஆண்டு நவம்பர் மாதப் பகுதியில் தனது சொந்த கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது.

இப்பாடசாலையில் பல தலைமை ஆசிரியர்கள் (அதிபர்) சேவையாற்றியுள்ளபோதிலும் நவாலியைச் சேர்ந்த அதிபர் வைத்திலிங்கம் (1962ஆம் ஆண்டு) அவர்களின் பணி போற்றுவதற்குரியது. ஏனெனில் அதுவரை காலமும் ஒரு கிணறு இல்லாது இயங்கிவந்த இப்பாடசாலை இந்த அதிபரின் (வைத்திலிங்கம்) முயற்சியினால் ஒரு கிணறு உள்ள பாடசாலையாக மாற்றப்பட்டு அக்காலத்திலிருந்து கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றமாகவும் விளங்கியது.

மேலும் பௌதீக வளங்களைப் பொறுத்த வரையில் ஒரு நிறைவான பாடசாலையாகக் காணப்படுகின்றது. அதிபர் மேலும் குறிப்பிடுகையில் இடப்பெயர்வுக்கு பின்னர் (1996இற்குப் பின்) கல்விப் பணிப்பாளர்களின் சிபார்சின் மூலம் உதவிகள் தொடர்ச்சியாகக் கிடைக்கப் பெற்று வருவதன்மூலம் சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய முடிந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஜி.ரி.இசற்றின் உதவியுடன் மலசல கூடங்கள் அமைக்கப்பட்டன. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் பாடசாலையின் கூரை வேலை புதிதாகச் செய்யப்பட்டது.

தண்ணீர்த்தாங்கி, விளையாட்டு முற்றம், தளபாடங்கள் என்பன 'யுனிசெவ்' நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் பாடசாலைக் கட்டடத்திற்கு கம்பி வலை யன்னல் அமைக்கப்பட்டது.

'போரூட்' நிறுவனம் பாடசாலைக் கிணற்றிற்குப் பாதுகாப்பாக மூடுவதற்கு கம்பிவலை அமைப்பதற்கு நிதியுதவி அளித்தது.

பாடசாலைக்கு நீண்டகாலமாகச் சொந்தமாக இல்லாதிருந்த மைதானம் பழைய மாணவர் சங்கத்தினரின் நிதி உதவியினாலும், பாடசாலை நலன்விரும்பி அமரர் சுபோதினி கெங்காதரம்பிள்ளை அவர்களின் ஒத்துழைப்பினாலும் கொள்வனவு செய்யப்பட்டது. தற்போது குடிதண்ணீர் வசதி, மின்சாரம் ஆகியவையும் அதிபரின் முயற்சியினால் செய்யப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் இலவச மதிய உணவு காரணமாக பாடசாலைக்கு மாணவர் வரவு 95 வீதத்திற்கு மேற்பட்டு இருந்தபோதிலும் மாணவர் கல்வி முன்னேற்றத்திற்குப் பெற்றோரின் விழிப்புணர்ச்சி போதாது அதிபர் என குறிப்பிடுகிறார். மேலும் சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டில் குறைவாக அக்கறை காட்டுவதாலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவற்றாலும் பிள்ளைகளின் பெறுபேறுகள் குறைவடையக் காரணம் என்றும் அதிபர் குறிப்பிட்டார்.

கடந்த இரு ஆண்டுகளாக ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாலும், மற்ற பாட ஆசிரியர்கள் மூலம் அவற்றை நிவர்த்தி செய்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் வருடா வருடம் சித்தியெய்துகிறார்கள்

பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவிற்கு அமரத்துவமடைந்த இக்கிராம பெரியார்களின் ஞாபகார்த்தமாக அவர்

காந்தன்

களின் உறவினர்களால் கொடுக்கப்பட்ட நிதியின் வங்கி வட்டிப் பணத்தின் மூலம் பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை மைதானத்திற்கு பாதுகாப்புச் சுவர் (மதில்) இல்லாத காரணத்தினால் கட்டாக்காலிக் கால்நடைகள் காரணமாக பாடசாலைத் தோட்டம் அமைப்பது கடினமானதாக இருப்பதாகவும் அதிபர் கூறினார்.

மாகாண மட்டத்தில் 2ஆம் இடம்

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவியான பஞ்சலிங்கம் விஜிதா தமிழ்த் தினப் போட்டியின் பிரிவு 3இல் கட்டுரை ஆக்கப் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் கோட்டம், வலயம், மாவட்ட மட்டங்களில் இடம்பெற்ற போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (50-86)

தீவகக் கல்வி வலயத்தின் விசேட கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற பெற்றோர் விழிப்புணர்வு நிகழ்வில் மேடையேற்றப்பட்ட 'அனைவருக்கும் கல்வி' என்னும் நாடகத்தில் புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்கள் தோன்றும் காட்சி இது. (50-267)

கம்பர்மலை வித்தியாலயத்தின் 2007ஆம் ஆண்டுக்குரிய பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் அதிபர் கு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலனின் பாரியார் திருமதி இராஜராஜேஸ்வரி சத்தியசீலன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலத்தில் சாரணர் பாசறை விழாவின் போது சாரணர்களால் அமைக்கப்பட்ட 'மும்முனைப் பாலத்தில் பாடசாலைச் சாரணர்களுடன், சாரணப் பொறுப்பாசிரியர் க.திருக்கேதீஸ்வரன் காணப்படுகின்றார். (படம்: மு.சந்திரகுமார்)

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் கண்காட்சி கடந்த மாதம் 19ஆம் திகதி நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.தெற்கு மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்பு உப அலுவலக முகாமை உதவியாளர் திருமதி நந்தினி கனகரத்தினம் கண்காட்சியைத் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (படம்: குமரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி நன்றி கூறுகின்றோம்

யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்ற
திரவியராஜா பவித்தா
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 117 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ரியூசன் ஆசிரியை கம்சா அனைவருக்கும் எமது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்: க.கதிரவேலு குடும்பத்தினர், தி.சந்திரவேலு குடும்பத்தினர், சந்திரபாலனின் சகோதர்களான தி.பாலசுப்பிரமணியம் (லண்டன்), தி.கதிர்காமதர்மி (சுவிஸ்), க.தவராணி (ஜேர்மனி).

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (79050)

காணி விற்பனைக்கு

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
021 4591438, 077 6916929

'லயம்' நுண்கலைப் பயிலகம்

(வண்ணை நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக உள்ள யாகினி பிறிண்டேர்ஸ் வீட்டில்)
மிருதங்க வகுப்புகள்
புதிய மிருதங்க வகுப்புகள் 09.10.2008 வியாழக் கிழமைவிஜயதசமி அன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றன. சேர விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.
620, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 0602211101

உ
சிவமயம்

சைவக்குருமணிகள் மிஷன்

208, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர்.
www.saivakurumanikal.org

கனடா வாழ் சைவக்குருமார்களின் நிதி அனுசரணையுடன் சைவக்குருமார்களின் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் திட்டம் – 2008

அன்புடையீர்,

மேற்படி திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் சைவக்குருமார்கள் எமது அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 25.10.2008 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

செயலாளர்.

உடுவில் பிரதேசத்தில் கால்நடைகள் பதிவு

யாழ்ப்பாணம்,ஒக்.7

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கால்நடைகளைப் பதிவுசெய்யும் நடவடிக்கை தற்போது கால்நடைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உடுவில் பிரதேசத்தில் கால்நடைகளை விநியோகிக்கும்போது அரச சார்பற்ற நிறுவனங்கள் கால்நடைத் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றே நடைமுறைப்படுத்த வேண்டும் என கால்நடைத் திணைக்கள நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் எஸ்.ஸ்ரீபன் அறிவித்துள்ளார். (202-300)

சிவபூமி பாடசாலைக்கு வாகனம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

நல்லூர்,ஒக்.7

சிவபூமி மனவிருத்தி பாடசாலைப் பிள்ளைகளின் போக்குவரத்து வசதிக்கென புதிய வாகனம் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச செயலர் 'நிக்கொட்' நிறுவனத்தினருடனும் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவருடனும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷின் ஊடாகத் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. (202-111)

நிவாரணம் விநியோகம்

மானிப்பாய் ப.நோ.கூ. சங்க கிளைகளில் சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் பங்கீட்டு அட்டைக்கு இரண்டு கிலோ சீனி சகல பாவனையாளர்களுக்கும் வழங்கப்படுகின்றன. (202-100)

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் திருவிழாவையொட்டி அன்னதானம்

யாழ்ப்பாணம்,ஒக்.7

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவையொட்டி தென்புலோலி மூச்சம் பலம் பொன்னையா சாமியார் மட அன்னதான சபை பக்த அடியார்களுக்கு அன்னதானத்தை இவ்வருடமும் மேற்கொண்டு வருகின்றது.

புலோலி வல்லிபுரம் வீதிச் சந்தியில் வருடாவருடம் இப்பெருந்திருவிழாவையொட்டி புலோலி இளைஞர் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் தண்ணீர்ப்பந்தல் இவ்வருடமும் செயற்படுமென்று புலோலி இளைஞர் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (202-218)

சமய சந்நிதிகளில்

நல்லூர்,ஒக.7

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுரநாதர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழா நடைபெறும். (201-111)

* * *

பாண்டியன்தாழ்வு அருள்மிகு ஸ்ரீநரசிம்ம ஞானவைரவர் ஆலயத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை விஜயதசமி தினத்தன்று பிற்பகல் 4 மணிக்கு மானம்பூ உற்சவம் நடைபெறவுள்ளது. (201)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2008ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் 5ஆவது நிலையைப்பெற்ற
செல்வன் அருள்நாயகம் சாள்ஸ் அன்ரனி
(யா/ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)
அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் அன்பழகன் அவர்களுக்கும் மற்றும் ஊக்கமளித்த பெற்றோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இவர் மேன்மேலும் சிறப்புப் பட்டங்களைப்பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
இரத்தினம் மாமி, மச்சான்மார்கள், மச்சாள்மார்கள்.

கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (79009)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் 2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

செல்வி சு.விஜேந்திவி	148
செல்வி ஈ.விஜித்திரா	142
செல்வி ஜெ.ரஜிந்திவி	140
செல்வி சி.சாம்பகி	139
செல்வி ச.வினுஷா	139
செல்வி ச.திவிஷா	136
செல்வி சி.சங்கவி	120
செல்வி அ.சாலினி	118
செல்வி சி.துர்க்கா	118
செல்வி சு.கீர்த்தனா	116

மேற்படி மாணவர்களையும் அவர்களது கற்றலுக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்களையும் மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துவதோடு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.

(சி/555008)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 22 ✱ 07 ✱ 1930
விண்ணில் 08 ✱ 10 ✱ 2007

அமரர் இறப்பியேல் செபஸ்தியாம்பிள்ளை

அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அணையாத தீபமாய்
எம்மவர் மனங்களில் நிறைந்திட்ட
எம் அன்பு அப்பாவே!
கழிகின்ற பொழுதெல்லாம்
விழிகளில் நீர் சுமந்து
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம்
ஆண்டொன்று கடந்தாலும்
ஆறாது எம் துயர்.

ஆன்மா சாந்தியடைய சகாயபுரம் புனித சாகய அன்னை ஆலயத்தில் நாளை (08.10.2008) புதன்கிழமை காலை 6 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

சகாயபுரம், மாதகல். (78990)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீங்காத நினைவுகள்

8ஆம் ஆண்டு நினைவலை



12ஆம் ஆண்டு நினைவலை

அமரர் கந்தன் இராசு — மலர்வு 20✱06✱1942 — உதிர்வு 05✱10✱2000
திருமதி இராசு இராசம்மா — மலர்வு 21✱07✱1947 — உதிர்வு 14✱11✱1996

திதி: அட்டமி (07.10.2008)

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் எட்டும் பன்னிரண்டும் ஆனாலும்
உங்கள் அன்பு முகத்தை எங்கள்
உள்ளங்கள் என்றும் மறந்ததில்லை.

ஆதியாமலை, உடுப்பிட்டி. (79031)
என்றும் நினைவுகளுடன்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் (லண்டன்).

பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 01 ✱ 08 ✱ 1935
விண்ணில் 07 ✱ 10 ✱ 1998

அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை
(ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி)

ஆண்டுகள் பத்து ஆகிடினும்
ஆறிடுமோ எங்கள் மனம்
நீங்கள் இல்லாத வாழ்வினை
நினைத்துப் பார்க்க முடிகிறதா?
துன்பக்கடலில் மூழ்கியே துவண்டு
துடிக்கின்றோம் துன்பங்கள் களைந்திடவே
துடுப்பாய் எங்களை வழிநடத்தும்
எம் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

லண்டன். (79045)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுத் தலைமை - நீதித்துறை முரண்பாடு முற்றி முறுகல் நிலை!

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணைக்கு முஸ்தீவு

கொழும்பு, ஒக்.7

நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித்துறைக்கும் இடையிலான முரண்பாடுதீவிரமடைந்து, அந்த முறுகல் நிலை பெரும் அரசியல் நெருக்கடியாக உருவாகும் சாத்தியம் தென்படுகிறது எனக் கொழும்பு வார இறுதி செய்திப் பத்திரிகைகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா உட்பட்ட உயர்நீதிமன்ற ஆயத்தினால் - நல்லாட்சியை நிலைநிறுத்தும் நோக்கோடு - அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்டவை எனக் கூறப்படும் தீர்ப்புகளும் உத்தரவுகளும் அரசுத் தலைமையினால் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளமை நெருக்கடி முற்றுவதற்கான பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.

காலி வீதியில் உள்ள அநாவசிய வீதித் தடைகளை அகற்றுவது தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டல் உத்தரவு காரணமாக முறுகல் நிலை மேலும் தீவிரமடைந்துள்ளது என்றும் தொடுக்கப்படுகின்றது.

அரசமைப்புக் கவுன்சிலை இயங்க வைக்கத் தவறியமை தொடர்பாக ஜனாதிபதி உட்பட்ட தரப்பினருக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டுள்ள வழக்கு -

நிதி அமைச்சின் செயலாளராகவும், திறைசேரிச் செயலாளராகவும் இருந்த டி. பி. ஜயசுந்தரவுக்கு எதிரான வழக்கு -

அரச அதிகாரிகளின் ஓய்வுபெறும் வயதைத் தம் தீர்மானத்துக்கு அமைய மாற்றுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்கும் வகையில் வெளியான வர்த்தமானி அறிவித்தலை ஆட்சேபித்துத் தொடரப்பட்ட வழக்கு -

ஆகியவை தொடர்பாக உயர்நீதிமன்றம் விடுத்த உத்தரவுகள் சம்பந்தமாக அரசுத் தலைமை வெளிப்படுத்திய பிரதிபலிப்புகள், இரு தரப்புகளுக்கும் - அரசுத் தலைமை மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கு - இடையில் ஏற்பட்டு வரும் முறுகல் நிலையை வெளிப்படுத்தி நிற்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அரசியல் நெருக்கடி உருவாகிறது

அரசின் சில முடிவுகள் மற்றும் தீர்மானங்களை நிராகரிக்கும் வகையில் நீதித் துறை உத்தரவுகளை விடுத்து வருகின்றமையால் அரசியல் நெருக்கடியொன்று உருவாகி வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக எதிர்காலத்தில் ஜனாதிபதி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளைப் புறக்கணிக்கும் சூழ்நிலை கூட உருவாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பிரதம நீதியரசருக்கு எதிராக பாரிய பிரசாரமொன்றை அரசு ஆரம்பிக்கவுள்ளதாகவும் பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருமாறு சில அமைச்சர்கள் யோசனைகளை முன்வைத்துள் ளனர் எனவும் கூறப்படு கின்றது.

அரச அதிகாரிகளின் ஓய்வுபெறும் வயதை நீடி க்கும் அதிகாரத்தைத் தமக்கு வழங்கும் விதத்தில் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்த வர்த்தமானி அறிவித்தலின் கீழ் தமக்குக் கிடைத்த அதிகாரத்தின் அடிப்படையில் சட்டமா அதிபர் ஸி. ஆர். டி. சில்வாவின் பதவிக் காலத்தை நீடித்தார்.

ஆனால் இந்த வர்த்தமானி அறிவித்தலின் வலிமைத் தன்மை குறித்த விடயம், உயர்நீதிமன்றத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் அப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கும் வகையில் சட்ட மா அதிபர் தமது பதவியை அடுத்த புதன்கிழமையுடன் துறந்து பதவி ஒய்வு பெறப் போகின்றார் எனத் தெரிவித்திருக்கின்றார்.

(உ)

இறந்த தலிபான் தலைவர் உயிருடன் திரும்பினர்?

இஸ்லாமாபாத், ஒக்.7

இறந்துவிட்டார் எனக் கருதப்பட்ட பாகிஸ் தானின் தலிபான் தலைவர் பைதுல்லா மெஹ்சுத் உயிருடன் திரும்பி வந்தார் என்று செய்தி வெளியாகியுள்ளது. தெற்கு வஜிரிஸ் தான் பகுதிக்கு சனிக் கிழமை வருகை தந்த பைதுல்லாவைப் பார்த்த மெஹ்சுத் பழங் குடியின மக்கள் மகிழ்ச்சியில் உறைந்து போயினர். அவருக்கு உற்சாக வர வேற்பளித்தனர்.

சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் போன்றவற்றால் நீண்டகாலமாக மெஹ்சுத் அவதிப்பட்டுவந்தார்.

ஒரு கட்டத்தில் சுயநினைவிழந்த அவர், திடீரென மரணமடைந்தார் என்றும் பத்திரி கைகள் குறிப்பிட்டிருந்தன. ஆனால் பத்திரி கைகளின் இந்தத் தகவலை தலிபான் தரப்பு மறுத்தது. மெஹ்சுத் இறக்கவில்லை; அவர் ஆரோக்கியமாக வாழ்கிறார் என்றும் தெரி வித்தது.

இந்நிலையில் பைதுல்லா மெஹ்சுத் உயிரோடு திரும்பி வந்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை-இந்திய கூட்டு கடற்படை ரோந்துக்கு தமிழக முதலமைச்சர் கருணாநிதி கடும் ஆட்சேபம்

சென்னை,ஒக்.7

பாக்கு நீரிணையில் இலங்கை-இந்திய கூட்டுக் கடற்படை ரோந்து மேற்கொள்ளும் உத்தேச திட்டத்தை தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி கடுமையாக ஆட்சேபித்துள்ளார்.

இலங்கை-இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் நியூயோக்கில் சில தினங்களுக்கு முன்னர் சந்தித்து கலந்துரையாடினர். அப்போது கூட்டுக் கடற்படை ரோந்து தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன.

அதனைத் தொடர்ந்தே இவ்விடயம் தொடர்பாக கருணாநிதி பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

''இன்றுள்ள நிலையில் இலங்கை- இந்திய கடற்படை ரோந்து அவசியமற்றது. ஏற்கனவே இந்த விடயம் கலந்து ஆலோசனை செய்யப்பட்டது. பல்வேறு காரணங்களுக்காக இந்த கூட்டு ரோந்து எமது அரசுக்கு சாதகமாக அமையவில்லை என்று கண்டறியப்பட்டது'' என்று அந்தக் கடிதத்தில் கருணாநிதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டு ரோந்து யோசனை தொடர்பாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனுடன் ஏற்கனவே கலந்துரையாடினேன். இந்தக் கூட்டு ரோந்தால் ஏற்படும் பாதிப்புக் குறித்து எமது பிரதம செயலாளர் விளக்கியிருந்தார். அதனை ஏற்றுக் கொண்ட அவர், இந்த திட்டத்தை முன்னெடுப்பதில்லை என்று கூறியிருந்தார் என்று முதல்வர் கருணாநிதி பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டி உள்ளார்.

(அ-1)

கொழும்பைப் பாதுகாக்க விசேட பொலிஸ் படை

கொழும்பு, ஒக்.7

தலைநகர் கொழும்பைப் பாதுகாப்பதற்காக விசேட பொலிஸ் படைப்பிரி வொன்று உருவாக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. என்று தெரி விக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை கட்டுப்படுத்தவும், விடுதலைப் புலி உறுப்பினர்களை கைது செய்வதற்கும் இந்த விசேட பிரிவு பயன்படுத்தப்படவுள்ளது.

குறித்த விசேட படைப் பிரிவில் சுமார் 800 பேர் ஆரம்பக் கட்டமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனைப் படி இந்த விசேட படைப்பிரிவு உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்த விசேட படைப்பிரிவு எட்டு கிளைகளைக் கொண்டு இயங்கவுள்ளது. சிலாபம், நீர்கொழும்பு, வத்தளை, மருதானை, களனிய, வெதமுல்ல, பம்பலப்பிட்டி, பாணந்துறை மலலசேகர மாவத்தை மற்றும் மக்கெலம் வீதி ஆகிய இடங்களில் இந்தக் கிளைகள் நிறுவப்படும்.

எதிர்காலத்தில் குறித்த விசேடப் படைப் பிரிவு பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சந்தன குடாஹெட்டியின் தலைமையின் கீழ் இந்த விசேட பாதுகாப்புப் படைப்பிரிவு இயங்க உள்ளது என மேலும தெரிவிக்கப்பட்டது. (சி)

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கும்

கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஒக். 7

அடுத்த வருடம் முதல் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரம் வரை அதிகரிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மொனராகலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் எமது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

குறிப்பாக சிறுவர்களின் நலனில் நாம் அதிக கரிசனை எடுத்துள்ளோம். சிறுவர்கள் புறக்கணிக்கப்படுகின்றமை குறித்துக் குரலெழுப்ப மனித உரிமை அமைப்புகள் எவையும் போதிய ஆர்வம் காட்டவேயில்லை.

ஆனால் இந்த விடயத்தில் நாம் அதிக ஆர்வம் கொண்டுள்ளோம். இருப்பினும், மனித உரிமைகளை நாம் மீறுகிறோம் என்று இந்த நாட்டில் இருந்து செயற்படும் சில அமைப்புகள் பொய்கூறி வருகின்றன.

இதுகுறித்து நாம் கவலையடைகிறோம். நாம் உண்மையில் சிறுவர்களின் நலனில் அதிக அக்கறை செலுத்தி வருகிறோம். கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் அனைவருக்கும் கல்வி வாய்ப்பை வழங்கவும் நாம் பல திட்டங்களை வகுத்துள்ளோம்.

அந்த வகையில் அடுத்த வருடம் முதல் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர் களின் எண்ணிக்கை 20 ஆயிரம் வரை அதிகரிக்கப்படும். - என்றார்.

(அ-சி)

கால்பந்து வீரர் சிம்சன் குற்றவாளி; கொள்ளை வழக்கில் அமெ.நீதிமன்றம் தீர்ப்பு

கொள்ளை, கடத்தல் வழக்கில் சிக்கிய கால்பந்து ஜர்ம்பவான் சிம்சன் குற்றவாளி என்று அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் கால்பந்து ஜாம்பவான் ஓ.ஜே.சிம்சன்.61 வயதான இவர் நடிகராகவும் மக்களிடையே பிரபலமானவர். கடந்த ஆண்டு சிம்சன் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட சம்பவம் திடுக்கிட வைத்தது. அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் நகரில் உள்ள 'கேசினோ' என்ற ஹோட்டலில் ஒரு அறையில் தங்கியிருந்த விளையாட்டு நினைவு பரிசுகளை விற்கும் இரண்டு வியாபாரிகளிடம் சிம்சனும், அவரது கூட்டாளிகளும் துப்பாக்கி முனையில் ஆயிரக்கணக்கான டொலர் மதிப்புள்ள பொருள்களை கொள்ளையடித்தனர்.

அதிரடியாக ஹோட்டலுக்குள் நுழைந்த அவர்கள் 6 நிமிடத்திற்குள் தங்கள் கைவரிசையைக் காட்டி விட்டு தப்பினார்கள்.பின்னர் பொலிஸ் விசாரணையில் அவர்கள் சிக்கினார்கள். சிம்சனின் கூட்டாளிகளில் 4 பேர் தங்களது குற்றத்தை ஒப்புக் கொண்டு தங்களுக்கு குறைந்த தண்டனை வழங்கும்படி ஆஜராகி இருந்தனர்.

இந்த நிலையில் இந்த வழக்கில் அமெரிக்க நீதிமன்றம் நேற்றுமுன்தினம் பரபரப்பு தீர்ப்பு அளித்தது. சிம்சனும், அவரது கூட்டாளி 54 வயதான ஸ்டூவர்ட்டும் குற்றவாளிகள் என்று அறிவித்தது. அவர்கள் மீது கொள்ளை, கடத்தல் மற்றும் 10 பிரிவுகளில் குற்றம் நிரூபணமாகி இருந்தது. 13 மணி நேரம் தீர ஆராய்ந்த பிறகு நீதிபதிகள் இந்த முடிவுக்கு வந்தனர். அதன் தொடர்ச்சியாக இரண்டு பேரும் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர். எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி அவர் களுக்கு என்ன தண்டனை என்ற விவரம் அறிவிக்கப்படும்.

இந்த வழக்கில் சிம்சனுக்கு குறைந்த பட்சம் 5 ஆண்டும், அதிக பட்சமாக ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. இதனை எதிர்த்து அப்பீல் செய்ய சிம்சனின் சட்டத்தரணிகள் முடிவு செய்துள்ளனர்.

(அ-ஒ)

தேர்தல்கள் திணைக்களத்துக்கு அடுத்த பட்ஜெட்டில் அதிக நிதி

பொதுத்தேர்தலுக்கான முன்னேற்பாடா?

கொழும்பு, ஒக்.7

அரசு 2009இல் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தலாம் என்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தல் ஆணையத்திற்கு அரசு சுமார் 110 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இது 2008ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டதைவிட பல மடங்கு அதிகமாகும். 2008இல் தேர்தல் ஆணையகத்திற்கு 28.5 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

அரசு தேசிய மட்டத்தில் தேர்தலுக்குத் தயாராகி வருவதற்கான அறிகுறியாக இதனைக் கருதலாம் எனத் தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் உறுப்பினர்களுடனான சந்திப்பொன்றின்போது தேர்தலுக்குத் தயாராகுமாறு ஜனாதிபதி தமது உறுப்பினர்களைக் கேட்டுள்ளார்.

எனினும் அது நாடாளுமன்றத் தேர்தலா அல்லது ஜனாதிபதித் தேர்தலா என்பதை அவர் தெரிவிக்கவில்லை.தேர்தல்கள் குறித்து ஆராயப்பட்டதை மூத்த அமைச்சர் ஒருவர் உறுதி செய்துள்ளார்.

அதேவேளை இது தொடர்பாக தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ-சி)

அல்- குவைதா தளபதி ஈராக்கில் சுட்டுக் கொலை

லண்டன்,ஒக்.7

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தி லுள்ள ஆதாமியா பகுதியில், அல்-குவைதா தளபதி மாகிர் அஹமத் மசூத் அமெரிக்கக் கூட்டுப் படையினால் சுட்டுக் கொல்லப் பட்டார். இவர் வீடொன்றில் பதுங்கியிருக் கிறார் எனக்கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, அப்பகுதிக்கு விரைந்த படையி னர் அவ் வீட்டை முற்றுகையிட்டனர்.

அதே சமயம் சரணடைந்து விடுமாறும் படையினர் கோரிக்கை விடுத்தனர். சரணடைவதற்கு மாறாக, அஹ்மத் மசூத் படையினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அஹமத் மசூத் கொல்லப் பட்டார். ஈராக்கில் பல்வேறு பகுதிகளில் இடம் பெற்று வந்துள்ள குண்டுத்தாக் குதல் சம்பவங்களுக்கு இவரே சூத்திரதாரி என்று அவர் விவரித்தார்.

(அ-ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.7

தேசிய மட்ட உதை பந் தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு வாசீகர் மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர் ச.சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்வார். (201)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2008ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 137 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய மாணவன்

செல்வன் சண்முகரத்தினம் சிவகுமார்

மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
பெற்றோர், உறவினர்.

களபூமி,
காரைநகர்.

மேம்பட வாழ்த்துகின்றோம்

2008 ஆம் ஆண்டு தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்த யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவி செல்வி

கணேந்திரன் காயத்திரி

மேன்மேலும் சிறப்புற வாழ்த்துவதுடன் அவரின் பெறுபேற்றிறுக்கு உதவிய அதிபர், ஆசிரியர்கள்,

ஊக்குவிப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்போர்:
திரு.து.கணேந்திரன், மல்லிகா, வினுஜா, ரொகித்தியன் மற்றும் திரு.திருமதி நா.தண்டாயுதபாணி.

திரு.நா.தண்டாயுதபாணி
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 129 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி மாணவியும் தர்மராசா தெய்வாம்பிகையின் புதல்வியுமாகிய

செல்வி ஜனுசிகா தர்மராசா

அவர்களது வெற்றிக்கு துணை புரிந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், விசேட கல்வி நிலைய ஆசிரியர்கள் ஆகியோரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அ.அகிலன் (மாமா),
அண்ணாமார், யோ.ரஜனிகாந்,
யோ.அருண், யோ.அசோக்காந்,
பெரியப்பா - செ.யோகராசா.

"அம்பிகை"
யனோகரா
அல்வாய்.

(சி/55009)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2008ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாகிய

உ.தர்சனா - 153, கு.அஜந்தன் - 137, வி.சாளினி - 137, இ.நிலானி - 135, சி.விதுர்சன் - 129, சு.சுவிஸ்ணா - 129, ஜெ.விதுர்சன் - 127, ஸ்ரீ.திருமகள் - 125, செ.துவித்தா - 122, ஜெ.புறுசோத் - 121, கீ.கீர்த்திகா - 119, ஜெ.சஜிந்தா - 116, ர.விஜய் - 115, சி.பரணிதரன் - 115

ஆகியோரையும் இவர்களோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 39 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் இம் மாணவர்களை நல்வழிப்படுத்திய நிர்வாகி, ஆசிரியர் இவர்களோடு உறுதுணையாக நின்ற ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கேம்பிறிஜ் கலாசாலை, நவிண்டில்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோப்பாய் நாவலர் வித்தியாலய மாணவர்கள்

செல்வன் ர.வேணுஜன் 117 புள்ளிகள்

செல்வன் கு.தர்சுஜன் 114 புள்ளிகள்

2008ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இவர்களைப் பாராட்டி மேலும் பல வெற்றிகளைப் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம். மேலும் இவர்களைக் கற்பித்து இவர்களின் உயர்விற்கு வழிகாட்டிய பாடசாலை அதிபர், பாடசாலை ஆசிரியர்கள், "அறிவாலயம்" கல்வி நிறுவனத்தினர் ஆகியோரை உளமார வாழ்த்துகின்றோம்.

நாவலடி
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (79035)

குணராசா குடும்பம்,
ரவீந்திரராசா குடும்பம், அப்பா.

நவராத்திரி விழா

யாழ்ப்பாணம்,ஒக்.7

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தீவகப் பிரதேசத்திற் கான நவராத்திரிவிழா இன்று செவ்வாய்க் கிழமை மு.ப.10 மணிக்கு சரவணை செல்லக்கதிர் காமம் முருகன் ஆலயத்தில் நடை பெறும்.

திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவிருக்கும் விழாவில், சின்னமடு றோ.க.த.க.பாடசாலை அதிபர் கே.சண்முகம் பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சரவணைப் பிரதேச கிராம சேவகர் க.பரமேஸ்வரன், யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் ஆகியோர் கலந்து கொள்வர். (201)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்.செலான் வங்கிக் கிளையில் வாணி விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (201)

நல்லூர் கோட்டத்தில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகிறது

வலி.வடக்கு,ஒக்.7

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

14,16வயதுப்பிரிவினர்களுக்கு இடையே இடம்பெறவுள்ள ஆட்டங்களில் இன்று மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

14 வயதுப் பிரிவு:

*கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

*கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்.

16 வயதுப் பிரிவு

*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

*அரியாலை கனகரெட்ணம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

*கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் கொக்குவில் இராமகிருஷ்ணன் வித்தியாலயம். (202-86)

உயர் தொழில்நுட்ப மாணவர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.7

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து பட்டமளிப்பு விழாவிற்கு செல்லும் 2006, 2007 பிரிவு மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக் கிழமை மு.ப. 10 மணிக்கு மேற்படி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. மாணவர்கள் அனை வரையும் தவறாது சமுகமளிக்குமாறு பணிப் பாளர் கேட்டுள்ளார்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.திருமதி [illegible]ன்ரன் சுரேஸ் ஞானசேகர் தம்பதியரின் செல்வப்புதல்வி

அ.சுகன்யா

யா/பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் வித்தியாலயம் 2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 118 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரை நெறிப்படுத்திய பாடசாலை அதிபரையும், ஆசிரியரையும் பிரத்தியேக வகுப்புகளில் கற்பித்த ஆசிரியர் திரு.சுதர்சன் அவர்களையும் வாழ்த்தி நன்றிகளைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் இவர் கல்வியில் முன்னேற இறையருள் வேண்டுகின்றோம்.

பெரியவிளான்,
இளவாலை.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நல்லூர் சென்பெனடிக்ற் வித்தியாலய மாணவன் செல்வன்

செ.அனுஷன்

2008 ஆம் ஆண்டு தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் 119 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல புலமைப் பரிசில்கள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம். இவர் தம் கல்விக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

77/3, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்: தாத்தா, அம்மம்மா
சின்னமாமா, பெரியமாமா குடும்பம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2008 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யா/பெரியபுலம் மகா வித்தியாலய மாணவர்களும் ரவிச்சந்திரன் -கோமதி தம்பதியரின் அன்புப் பிள்ளைகளுமான

செல்வன் ர.ஸ்ரனுஜன்
130 புள்ளிகள்

செல்வி ர.ஸ்ரனுகா
124 புள்ளிகள்

ஆகியோரை வாழ்த்துவதுடன் அவர்களுக்கு ஊக்கமும் கொடுத்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

101, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

வாழ்த்துபவர்கள்: அப்பப்பா,
அப்பம்மா,அம்மப்பா, அம்மம்மா.

(79002)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வடலியடைப்பு சைவப் பிரகாச வித்தியாசாலை மாணவனும் மாவிட்டபுரம் வீதி, கீரிமலையை சேர்ந்த நாகராசா - மகாலட்சுமி தம்பதியரின் புதல்வனுமான

செல்வன் நாகராசா குமரன்

2008ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 117 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு அவர் கல்வியில் மேன்மேலும் சிறந்து விளங்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். மேலும் இவரின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து கல்வி கற்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் சித்தங்கேணி "சுப்ரா" கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பூம்புகி வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அண்ணன்-யாத்தபாதி,
அக்கா-அபிராமி, மற்றும் உறவினர்கள்.

பிறந்தநாள் வாழ்த்தும் பாராட்டி வாழ்த்தும்

செல்வன்
ஜெ.பிரணவன்

செல்வி
ஜெ.சோபினி

யா/இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள்

ஜெகதீஸ்வரன் - கிரிசாலினி தம்பதியினரின் இரட்டைச் செல்வங்களான செல்வன் ஜெ.பிரணவன், செல்வி ஜெ.சோபினி 07.10.2008இல் தமது 10ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்கள். 2008இல் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பிரணவன் 146, சோபினி 123 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த இவர்களை வாழ்வில் மேலும் பல சிறப்புக்களையும் பெற்று வாழ, எல்லாம் வல்ல இணுவில் வட்டுவினிப் பிள்ளையார் அருள்புரிவாராக. இவர்களுக்கு கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

இணுவில்.

அத்தை குடும்பம், மாமன்மார் குடும்பம், அக்கா ஜெ.ஜெகபாலினி.

(78895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

அடுத்த வருடத்திலும் தொடர்ந்து மற்றொரு யுத்த 'பட்ஜெட்'

இன்னும் ஒரு மாத காலத்தில் - அதாவது நவம்பர் 6 ஆம் திகதி - இலங்கையின் நிதி அமைச்சர் என்ற முறையில் - இலங்கைத் தேசத்தின் மற்றொரு யுத்த வரவு - செலவுத் திட்டத்தை இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கின்றார்.

அதற்கு முன்னோட்டமாக அடுத்த ஆண்டு பல்வேறு அமைச்சுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் அளவை வெளிப்படுத்தும் நிதி ஒதுக்கீடுகள் சட்டமூலம், முதலாம் வாசிப்புக்காக நாளைமறுதினம் வியாழக்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

அதில், பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு இம்முறை 17 ஆயிரத்து 710 கோடி ரூபாவரை எகிறியிருப்பது பதியப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 16 ஆயிரத்து 640 கோடி ரூபாவையும் தாண்டிவிட்டது அடுத்த ஆண்டுக்கான உத்தேச பாதுகாப் புச் செலவினம்.

உண்மையில், இந்த ஆண்டிலும் சரி, இனி வரப்போகும் அடுத்த ஆண்டிலும் சரி, பாதுகாப்புத் துறைக்கென - கறுப்பு வெள்ளையில் - காகிதத்தில் - ஒதுக்கீடு செய்யப்படும் தொகையை விடவும்,யதார்த்தத்தில் - நிஜத்தில் - செலவிடப்பட்ட அல்லது செலவிடப்படவிருக்கின்ற தொகை மிகமிக அதிகம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

2006 ஆம் ஆண்டிலிருந்து - இந்த அரசு பதவியேற்ற காலம் முதல் - நிலைமை இதுதான் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

2006 இல் வரவு - செலவுத்திட்டம் மூலம் பாதுகாப்புத்துறைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 9 ஆயிரத்து 600 கோடி ரூபாவாகும். ஆனால் இறுதியில் செலவிடப்பட்ட தொகையோ 11 ஆயிரத்து நூறுகோடி ரூபா.

2007 இல் வரவு - செலவுத் திட்டத்தின்படி பாதுகாப்பு அமைச்சின் செலவினம் 13 ஆயிரத்து 900 கோடி ரூபா என உத்தேசிக்கப்பட்டது. ஆனால் கடைசியில் 15 ஆயிரத்து 600 கோடி ரூபா செலவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதேபோல நடப்பாண்டில் - 2008 இல் - பாதுகாப்புச் செலவினத்துக்கு வரவு - செலவுத்திட்டம் மூலம் 16 ஆயிரத்து 600 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் உண்மைச் செலவினம் அதைவிடப் பல்லாயிரம் கோடி ரூபாவைத் தாண்டும் என்பது இப்போதே நிச்சயமாகிவிட்ட விடயம்.

ஆண்டு இறுதியில், உத்தேச மதிப்பீட்டைத் தாண்டி, அதிகமாக இவ்வளவு ஆயிரம் கோடி ரூபா பாதுகாப்புத் துறைக்கென செலவிடப்பட்டதாகக் காட்டப்பட்டாலும் கூட அதுவும் உண்மையான - யதார்த்தமான - செலவினத் தொகை அல்ல என்பதும் -

கணிசமான அளவு குறைத்துக் காட்டப்பட்ட தொகையாகவே அதுவும் இருக்கும் என்பதும் -

இங்கு நம்பமுடியாத உண்மைகளாகும்.

பாதுகாப்புத் துறைக்கென பல்லாயிரம் கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுக் குவிக்கப்படும் கனரக ஆயுதங்கள், யுத்த தளபாடங்கள் என்பன உடனுக்குடன் யுத்தமுனைக்கு அனுப்பப்பட்டுவிடுகின்றன. ஆனால் அவை ஏற்படுத்தும் - அல்லது அவற்றின் கொள்வனவினால் ஏற்படும் - செலவினம் மட்டும் உடனுக்குடனான - அந்தந்த வருடத்துக்குரிய - செலவுத் தொகையாகப் பதியப்படுவதில்லை.

இந்தக் கொள்வனவுகள் பெரும்பாலும் நீண்டகால கடன் அடிப்படையில் - அல்லது வாடகைக் கொள்வனவு முறையில் - மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே, அந்தத் தளபாடங்களும், யுத்தக்கருவிகளும், ஆயுதங்களும் உடனடியாகக் களமுனைக்கு அனுப்பப்பட்டாலும் அவற்றினால் ஏற்பட்ட செலவினம் மட்டும் அந்த வருடத்துக்குரியதாகக் காட்டப்படாமல், அடுத்த பல வருடங்களுக்கான செலவுகளில் சேர்க்கப்பட்டு, அத்தகைய வருடங்களுக்கு உரியனவாகப் பிரிக்கப்பட்டு விடுகின்றன.

எனவே இந்த வருடத்தில் பாதுகாப்புச் செலவினத்துக்கெனக் காட்டப்படும் தொகையை விட மேலும் பல்லாயிரம் கோடி ரூபா செலவிடப்பட்டு, அவை அடுத்து வரும் பல வருடங்களுக்கான செலவுகளாகக் காட்டப்படப் போகின்றன என்பதுதான் உண்மை நிலைவரமாகும்.

தவிரவும், பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு வழங்கப்படும் பெரும் தொகையான ஓய்வூதியக் கொடுப்பனவு, அங்கவீனக் குறைபாடுகள் மற்றும் உயிரிழப்புகளுக்கான நஷ்டஈடுகள் போன்ற பெருவாரியான செலவினமும் பாதுகாப்பு அமைச்சின் கீழான செலவினமாகக் காட்டப்படுவதில்லை. அவை, பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செலவினத்திலும், சமூக சேவைகள், நலன்புரி அமைச்சின் செலவினத்திலும் சேர்க்கப்பட்டு விடுவதால், அவற்றினால் பாதுகாப்பு அமைச் சுக்கு ஏற்படும் செலவினங்களும் வெளிப்படுத்தப்படுவதில்லை.

இப்படி மறைக்கப்பட்ட செலவுகளையும் தாண்டி குறைந்தபட்சம் 17 ஆயிரத்து 710 கோடி ரூபாவை 'மஹிந்த சிந்தனை'யின் கீழான யுத்த வெறிப்போக்கு வரும் வருடத்தில் கபளீகரம் செய்யப்போகின்றது.

உயர்ந்த பட்ச இராணுவச் செலவினம் மட்டும் வெற்றியைத் தேடித் தந்துவிடப் போவதில்லை. அமெரிக்க வல்லாதிக்கம் கடந்த ஐந்து வருடகாலத்தில் ஈராக் யுத்தத்துக்காக ஒரு ட்ரிலியன் (ஒரு லட்சம் கோடி) டொலர்களையும் தாண்டிய தொகையைச் செலவிட்டும்கூட இன்னும் அந்த யுத்தத்தில் அதனால் வெற்றிபெறவே முடியவில்லை என்ற அனுபவப் பாடம் எம்முன்னால் விரிந்து கிடக்கின்றது.

தனது மொத்த செலவினத்தில் சுமார் நாற்பது வீதத்தைத் தனது முன்னைய கடன்கள் மற்றும் அவற்றுக்கான வட்டியைத் திருப்பிச் செலுத்துவதற்காகச் செலவிட்டு வரும் இலங்கை போன்ற வறிய தேசத்துக்கு, இத்தகைய யுத்த வெறிப் போக்கிலான பெரும் இராணுவச் செலவினம் பலத்த பொருளாதாரப் பின்னடைவு நிலையை - வீழ்ச்சியை - ஏற்படுத்தும் என்பது உறுதி.

அதனைப் புரிந்து கொள்ளாமல் போர் முனைப்பில் தீவிரம் கொண்டு அலையும் 'மஹிந்த சிந்தனை', இந்தப் பொருளாதார நெருக்கடிகளின் உண்மை முகத்தை எதிர்கொள்ளும்போது அதனை எப்படிச் சமாளிக்கப் போகின்றதோ.....? அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

போக்குவரத்து, சமூக சேவைகள் அமைச்சுகள்

வடமாகாண இ.போ.சவின் பிரச்சினைகளைத் தீர்க்க இணை அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கவுள்ளன

கொழும்பு, ஒக.7

வடக்கு மாகாண இலங்கை போக்குவரத்து சபை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு போக்குவரத்து அமைச்சும் சமூக சேவைகள் அமைச்சும் இணைந்து இணை அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கவுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை சமூக சேவைகள் அமைச்சில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டிலேயே, இணை அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

வடமாகாணத்திற்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் பேரூந்து சாலைகளின் குறைபாடுகளை இனங்கண்டு, அவற்றைத் தீர்த்து அப்பகுதிகளில் பொது மக்களுக்கான போக்குவரத்தைச் சீர்செய்து உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இரண்டாம் கட்ட உயர்மட்ட மாநாடு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இம்மாநாட்டில் போக்குவரத்து அமைச்சின் உயரதிகாரிகளும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் உயரதிகாரிகளும், யாழ்ப்பாணம் , வவுனியா மற்றும் மன்னார் பேரூந்துசாலைகளின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

வடமாகாண மக்களின் போக்குவரத்துச் சேவையை சீர்செய்து அதனை உறுதிப்படுத்தும் நோக்கில் முதலாவது உயர்மட்ட மாநாடு கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது.

இரண்டாம் கட்ட மாநாட்டில் ஊழியர்கள் பற்றாக்குறை, உரிய வருமானம் இன்மையால் ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறை, பதவி உயர்வுகள் மற்றும் நிரந்தர நியமனங்கள், பேரூந்துசாலைகளின் புனரமைப்புப் பணிகள், சுற்றுவளவு பாதுகாப்பு வேலிகள், குடிதண்ணீர், போதிய பேரூந்துகளுக்கு இயந்திரங்கள் உட்பட உதிரிப்பாகங்கள் இன்மை, மின்சாரப் பிரச்சினை, தங்கு மிட வசதிகள் இன்மை போன்ற பல்வேறு குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.

இப் பிரச்சினைகள் தொடர்பில் போக்குவரத்து அமைச்சின் உயரதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொதுமக்களது போக்குவரத்து சேவையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் விளக்கிக் கூறினார்.

இதனையடுத்து எட்டப்பட்ட இணைக்கப்பாட்டிற்கு அமைய மன்னார் பேருந்துசாலைக்கு 5 புதிய பேருந்துகளையும் 3 புதிய எஞ்சின்களை வழங்கவும் வவுனியா பேரூந்து நிலையத்திற்கு 5 புதிய பேரூந்துகளையும், 3 புதிய எஞ்சின்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. ஏனைய அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு போக்குவரத்து அமைச்சு - சமூகசேவைகள் அமைச்சும் இணைந்து இணை அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. (202)



கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் விற்பனைக்காக மண்டான் கடற்கரையிலிருந்து உப்பு எடுத்துச் செல்லும் சிலரையே படத்தில் காண்கிறீர்கள். அன்றாடப் பொருள்களின் விலையேற்றம் எந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை எம்மக்களின் இந்த நிலை சுட்டிக் காட்டுகின்றது. (படம்: கலைஞன்)

சிலப்பதிகாரப் பெருவிழா

கொழும்பு,ஒக.7

ஈழத்து பூதந்தேவனார் புலவர் கழகத்தின் ஏற்பாட்டில் சிலப்பதிகாரப் பெருவிழா எதிர்வரும் 11,12,13 ஆகிய திகதிகளில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிஞர் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவில் பேராசிரியர் மு.பி. பாலசுப்பிரமணியம், பேராசிரியர் க.ப.அறவாணன், பேராசிரியை தாயம்மாள் அறவாணன், பேராசிரியர் அ.அறிவுநம்பி ஆகிய தமிழக அறிஞர்களும்- கல்வி அமைச்சின் மேல திகச் செயலாளர் சி.தில்லை நடராசா, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியை ஞானாம்பிகை குலேந்திரன், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் திருமதி ரூபி லலன்ரைனா பிரான்சிஸ், ஊவாப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.ரூபவதனன், பேராசிரியை பல்கலைக் கழக முனைவர்வமகேசுவரன், யாழ்.பல்கலைக்கழகத்து செல்வி செல்வ அம்பிகை நடராசா, சப்பிரகமுவ பல்கலைக்கழகத்து வாகீச கலாநிதி க.நாகேசுவரன் ஆகிய ஈழத்து அறிஞர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு நிகழ்வாக ''சிலப்பதிகாரக் கட்டுரைகள்'' என்னும் நூல் வெளியீடு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சாவகச்சேரி நகரசபை முன்பள்ளிகளுக்குப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக.7

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினர் முன்பள்ளிகளுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டியினை நடத்தவுள்ளனர்.

சபையின் விசேட குழுவினர் முன்பள்ளிகளுக்கு நேரில் சென்று ஆய்வுகளை நடத்துவர் எனவும், குழு சமர்ப்பிக்கும் அறிக்கைப் பிரகாரம் தெரிவு செய்யப்படும் மூன்று முன்பள்ளிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

இளங்கலைஞர் மன்றத்தின் வாணிவிழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக.7

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினர் நடத்தும் வாணிவிழா நிகழ்வுகளில் இறுதி நாளான இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மன்ற மாணவிகளின் வயலின் இசை, குழு இசை என்பன இடம்பெறும். தொடர்ந்து நல்லைக் கலாமந்திர் மாணவிகளின் நாட்டியாஞ்சலியும் இடம்பெறும்.

விஜயதசமி நாளான நாளைமறுதினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு மன்றத்தில் வித்தியாரம்பம் இடம்பெறவுள்ளது. குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் பயில விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-111)

வலிகாமம் பிரதேசத்தின்

சந்தை நடவடிக்கைகளை மேம்படுத்த அராலிப் பாதை புனரமைக்கப்பட வேண்டும்

அரச அதிபரிடம் கோரிக்கை

மானிப்பாய், ஒக.7

வலிகாமத்தில் உள்ள சங்கானை-பண்டத்தரிப்பு பிரதேசங்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தவும், சந்தைகளை வினைத்திறனாக மாற்றி அமைக்கவும் ''அராலி கடல்பாதையை'' மீள் புனரமைப்புச் செய்ய அரசாங்க அதிபர் முன் வரவேண்டும்.

இவ்வாறு பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கத் தலைவர் ச.செல்வரத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வலிகாமத்தில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகள் வினைத்திறனான சந்தை வசதிகளை பெறுவதற்கு- போக்குவரத்து வசதிகள் குடாநாட்டில் சீர் செய்யப்பட வேண்டும்.

அந்த வகையில் தீவகத்திற்கு செல்லும் கடல்வழிப்பாதையான அராலிப் பாதையை தரைவழிப் பாதையாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இத்திட்டம் அரசாங்க அதிபர் க.கணேஷ் ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலாளர்களின் முன்மொழிவுகள் ஊடாக இந்த அபிவிருத்தி திட்டங்களை முன்வைத்து செயற்படுத்த வேண்டும்.

வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு, வலி.தெற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளை சந்தைப் படுத்தவும்-

சந்தைகளை வினைத்திறனாக்கி தீவகத்திற்கும்-வலிகாமத்திற்கும் இடையிலான போக்குவரத்தினை வலுவுடையதாக்கவும் அராலி- வேலணை கடற்பாதையை புனரமைத்து அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் கோரியுள்ளார். (202-95)

ஜீ.சீ.ஈ. பரீட்சை முடிவுகள் டிசெம்பரில்; விளாத்தாள் திருத்தும் பணி நிறைவு

கொழும்பு, ஒக.7

ஆசிரியர்களின் பகிஷ்கரிப்புக்கு மத்தியிலும் நேற்று முன்தினம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விளாத்தாள்கள் திருத்தும் பணி நிறைவடைந்துள்ளது என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அநுர எதிரிசிங்க நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் டிசெம்பர் மாதமளவில் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படும் என்றும் ஆணையாளர் மேலும் சொன்னார்.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட ஆசிரியர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இப்பணியில் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்குத் தாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறார் என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை, இந்தப் மதிப்பீட்டுப் பணி நேற்று முன்தினத்துடன் முடிவுற்றிருக்க வாய்ப்பில்லை என்று ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (சி)

நாளை

புரட்டாதி 22	08.10.2008 புதன்கிழமை
திதி:	நவமி பி.இ.03.01வரை
நட்சத்திரம் :	உத்திராடம் பி.இ.03.51 வரை
சுபநேரம் :	04.32 -06.02
[illegible] :	[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விஸ்வப் பிரம்மனே நம

2ஆம் ஆண்டு நினைவுகளில்...

திருமதி கந்தவனம் தவமணி

நிஜமாக 26*05*1933

நிழலாக 30*09*2006

திதி: அட்டமி

அம்மம்மா...
இரண்டாண்டுகள் சென்றாலும் - எம்
ஈரவிழிகள் உறங்கவில்லை - உம்
நினைவுகளால்....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"மூத்தவிநாயகர் கோயிலடி",
கரணவாய் தேற்கு, கரவெட்டி. (79062)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

இகத்திற்கு 29 * 09 * 1929

பரத்திற்கு 19 * 10 * 2007

திரும்தி இளையதம்பி நாகரத்தினம்

சிறகில் எமை வைத்துச் சீராட்டி வளர்த்த
தாய்ப்பறவை தன்சிறகை விரித்து எங்கோ
சொல்லாமல் பறந்து இன்றோடு ஓராண்டு ஆகியதே!
சேய்ப்பறவைகளின் உருகும் உள்ளம் ஓயவில்லை
குமுறும் நெஞ்சம் ஆறவில்லை.

எம்மைவிட்டுப் பரமன் பாதம் சேர்ந்த எமது அன்புத் தாயின் ஓராண்டுப் பூர்த்திக் கிரியைகள் இன்று (07.10.2008) செவ்வாய்க்கிழமை நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.10, கேசாவில் வீதி,
வண்ணார்பண்ணை. (79061)

வ.இளையதம்பி
குடும்பத்தினர்.

விற்பனையாகின்றது

ஆசிரியர் அன்ரனின்
2008 - க.பொ.த(சா.த) பரீட்சை
விஞ்ஞானம்
முன்மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்)
தமிழ்மொழி மூலம், ஆங்கிலமொழி மூலம் அனைத்து
யாழ். புத்தகசாலைகளிலும் கிடைக்கின்றது.

மானிய விலையில் உரம் விநியோகம்

தென்மராட்சி,ஒக.7

வரணி வடக்கு விவசாய சம்மேளனத்தால் உரத்திற்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு சாவகச்சேரி கமநலசேவைகள் நிலையத்தால் உரம் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை விண்ணப்பித்தவர்கள் உரத்தினை பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (201)

திராட்சைப் பழம் விலை வீழ்ச்சி

கோப்பாய்,ஒக.7

திராட்சைப் பழங்களின் விலையில் தற்போது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சிறுப்பிட்டி, நவக்கிரி, உரும்பிராய், ஊரெழு ஆகிய பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட திராட்சைப் பழங்கள் தற்போது சந்தைக்கு வந்துள்ளமையால் அவற்றின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போது திராட்சைப் பழங்கள் கிலோ 60 ரூபா முதல் 100 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாகக் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சுமாரான விளைச்சலே இம்முறை கிடைத்துள்ளதாகத் திராட்சை செய்கையாளர் தெரிவிக்கின்றனர். (201-72)

நாடக விழா

கரவெட்டி,ஒக.7

வல்வை சிதம்பராக் கல்லூரி பழைய மாணவர் மன்ற வளர்ச்சி நிதிக்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாடகவிழா ஒன்று கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

தமிழ் மாணவ மன்றத் தலைவர் செல்வர் வி.டினேஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 2007ஆம் ஆண்டு வடமராட்சி வலயத்தில் வெற்றியீட்டிய "பெண்ணென்றுபிறந்தால்" என்னும் நாடகமும் 2008ஆம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்ற "ஞானசௌந்தரி" என்னும் நாடகமும் இடம்பெறவுள்ளன. (203-207)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 20 மாணவர்கள் 'சிப்தற' புலமைப் பரிசிலுக்குத் தெரிவு

வடமராட்சி,ஒக.7

பருத்தித்துறை, வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சையில் அதிதிறமைச் சித்தி பெற்ற வறுமைக்கோட்டுக் கீழ் வாழும் 20 மாணவர்கள் சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் 'சிப்தற' புலமைப் பரிசிலுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவானோர் விவரம் வருமாறு:

மனோகரன் பிரகாஷ் - கெருடாவில் தெற்கு, பிரேமநாதன் கஜேந்தினி - தொண்டைமானாறு, குணபாலசிங்கம் சஞ்சி - கெருடாவில் தெற்கு, மகேந்திரன் தினேஷ் - நெடியகாடு, சரவணபவன் மங்கையர்க்கரசி - வல்வெட்டித்துறை, சிறிஸ்கந்தராசா கௌதமி - பொலிகண்டி, சோதிராசா நிதர்சனா - பொலிகண்டி, மனோகரன் பார்த்திபன் - அல்வாய் மேற்கு, வேலும்மயிலும் ஜெனுலா - இன்பருட்டி, நடராசா ஜனார்த்தனன் - வியாபாரிமூலை, மகாதேவன் சாளினி - பருத்தித்துறை, துரைராஜ் அபிராமி - பருத்தித்துறை, கனகரட்ணம் றூபிதா - தும்பளை தெற்கு, ரவீந்திரன் மேனன் - தும்பளை தெற்கு, அருந்தவராசா கரிகாலன் - கற்கோவளம், கிரிதரன் நிரோஜன் - பருத்தித்துறை, சிவபாலன் சுபாஜினி - பருத்தித்துறை, இராமச்சந்திரன் குகதாசன் - காந்தியூர், லோகராஜா ரஜீவன் - புலோலி தெற்கு, மனோகரன் ஜனனி - துன்னாலை வடக்கு. (203-236)

இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

லண்டனில் வசிக்கும் ஜெயசீலன் - வனஜா தம்பதியரின் செல்வப்புதல்வன் சாருஜா தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (07.10.2008) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை அன்பு அப்பா, அம்மா, நவாலியில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, பருத்தித்துறையில் வசிக்கும் மாமா, மாமி, மச்சான் மற்றும் யாவரும் களையோடை அம்மன் அருள் பெற்று சகல செல்வங்களுடன் நீடூழி வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

அரசடி, நவாலி,
மானிப்பாய். (79025)

கே.திருஞானசம்பந்தர்
(அம்மப்பா).

உளமார வாழ்த்துகின்றோம்

திரு.இ.வரதீஸ்வரன்
(B.B.A(Hons), M.A(Merit), SLAS Class-1)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளரும், சமுர்த்தி பிரதிப் பணிப்பாளராகவும் கடமையாற்றுபவருமான திருவாளர் இராசரட்ணம் வரதீஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுகலைமாணி பட்டப்படிப்பில் சிறப்புத் தரத்தில் (Merit) சித்தியெய்தியமையை மனதாரப் பாராட்டுவதுடன், மேன்மேலும் உயர்வுகள் பெற்று சேவையில் மிளிர வாழ்த்துகின்றோம்.

ஸ்கிறின் பிறிண்ரிங் மாணவர்களும் போதனாசிரியரும்
பயிற்சியகம், பிரதேச செயலகம், பருத்தித்துறை. (79043)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 - 04 - 1949

உதிர்வு 07 - 10 - 2007

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும்,
கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவராகிய

திருமதி ஞானேஸ்வரி ஞானதிலகன்

(43, 2/3, வைட் ஹவுஸ், ருத்திரா மாவத்தை, கொழும்பு-06)

ஓர் ஆண்டு ஓடி முடிந்ததம்மா,
ஆண்டுகள் பல ஓடிக் கழிந்தாலும்
உம் நினைவால் தினம் தினம் வேதனை சுமந்து நிற்கிறோம்.
எம் உடலில் உயிர் இருக்கும்வரை ஆறமுடியாத வேதனையம்மா,
இறைவன் சந்நிதானத்தில் உங்கள் ஆத்மா சங்கமித்து சாந்தியடைய
இறைவன் அருளை வேண்டிநிற்கும்,

கணவர், மகன், மகள்கள்,
மருமகன்மார், மருமகள், சகோதர - சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள், பேரப்பிள்ளைகள்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி நல்லம்மா செல்லையா

தோற்றம் 17*07*1918

மறைவு 07*09*2008

எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து துயர் பகிர்ந்தோருக்கும், தொலைபேசி மூலமும், அஞ்சல் வழி மூலமும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உதவி ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை இன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனை தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பாதிரி கோயிலடி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (79054)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ரஜீவின் இடிப்பிற்குப் பிறகும் ஈழத்தமிழர் மீது கருணையோடு செயற்பட்டு வருகிறது காங்கிரஸ்

தமிழகக் கிளைத் தலைவர் தங்கபாலு சொல்கிறார்

சென்னை, ஒக்.7

ஈழத் தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் மேற்கொள்ளும் தாக்குதல்களை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டியும், அதில் மத்திய அரசு தலையிட்டு தமிழர்களுடைய பாதுகாப்புக்கும், வாழ்வுரிமைக்கும் உரிய நடவடிக்கையை எடுக்க உத்தரவிடுமாறும் பிரதமர் மன்மோகன் சிங்கை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

-இவ்வாறு தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தெரிவித்துள்ளார்.

அத்துடன், ரஜீவ்காந்தியின் இழப் பிற்கு பிறகும் தொடர்ந்து ஈழத்தமிழர்களின் நலனில் காங்கிரஸ் கருணையோடு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

நேற்று சத்தியமூர்த்தி பவனில் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் மீது நடைபெறும் தாக்குதல்களை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டியும், அதில் மத்திய அரசு தலையிட்டு தமிழர்களுடைய பாதுகாப்புக்கும், வாழ்வுரிமைக்கும் உரிய நடவடிக்கையை எடுக்க உத்தரவிடுமாறும் பிரதமர் மன்மோகன் சிங்கை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த செப்ரெம்பர் 3ஆம் திகதி புதுடில்லியில் சோனியா காந்தி தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் நானும் கலந்துகொண்டு இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைக்கு பாதுகாப்பு வேண்டும், தமிழர்களுக்கு எதிரான செயற்படும் இலங்கை இராணுவத்துக்கு நாம் உதவி செய்யக்கூடாது எனவேண்டுகோள் விடுத்தேன்.

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற சார்க் மாநாட்டின்போது ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் பாதுகாப்பு துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணி தமிழர் பாதுகாப்பு குறித்துப் பேசியுள்ளார். ரஜீவ்காந்தியின் இழப்பிற்கு பிறகும் தொடர்ந்து ஈழத்தமிழர்களின் நலனில் காங்கிரஸ் கருணையோடு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாடு அறியும் என்றார். (அ-ஒ)

சீனாவில் பூகம்பம்

பீஜிங், ஒக்.07

சீனாவின் வட மேற்குப் பகுதியிலுள்ள ஜிங்சியான் மாகாணத்தை நேற்று திங்கட்கிழமை அதிகாலை பூகம்பம் உலுக்கியது. மக்கள் அலறியடித்துக் கொண்டு, வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள். வீடுகளும், கட்டிடங்களும் குலுங்கின என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

வீடுகளை விட்டு வெளியேறிய மக்கள் திறந்த வெளிகளில் கூடி நின்றார்கள். அநேக வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. உயிரிழப்புகள் தொடர்பாக உடனடியாகத் தகவல்கள் வெளியாகவில்லை. காயமடைந்த அநேகர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் அவர்கள் கூறினார்கள்.

இப்பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.7 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. மீட்பு, நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சீனாவின் ஜிங்சியான் மாகாணம் அடிக்கடி பூகம்பத் தாக்கங்களுக்கு இலக்காகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது என்றும் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ)

ஈழத் தமிழர் பிரச்சினையில் உடன் தலையிடாவிட்டால் தமிழக நீர்நிலைகளில் சயனைட் விஷம் கலப்போம்!

தமிழக அரசுக்கு தொலைபேசி மிரட்டல்

சென்னை, ஒக்.7

ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் தமிழகத்தில் உள்ள நீர் நிலைகளில் விஷத்தை கலப்போம் என்றும் கூறி சென்னை பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு வந்த தொலைபேசி அழைப்பால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து மேலும் வெளியான தகவல்கள் வருமாறு-

சென்னை பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு நேற்றுமுன்தினம் மாலை 4.05 மணிக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

அதில் பேசிய மர்மநபர், ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கு போர் நிறுத்தம் ஏற்பட வழிசெய்ய வேண்டும். முதலமைச்சர் இந்தப் பிரச்சினையில் தலையிட வேண்டும். இந்தியாவில் ஈழத் தமிழர்களை சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழகத்தில் உள்ள நீர் நிலைகளில் சயனைட் விஷத்தை கலப்போம் என்று கூறி மிரட்டல் விடுத்து விட்டு உடனே தொலைபேசி அழைப்பைத் துண்டித்து விட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, பொலிஸ் கமிஷனர் சேகர் உத்தரவின்பேரில் பொலிஸார் விசாரணை நடத்தினர். மர்ம அழைப்பு வந்த தொலைபேசி எண்ணை வைத்து விசாரணை நடத்தியதில் கரூரிலிருந்து ஒரு ரூபா தொலைபேசியில் மர்ம ஆசாமி பேசியமை தெரியவந்தது உடனே மத்திய குற்றப்பிரிவு தனிப்படை பொலிசார் கரூர் விரைந்தனர்.

குறிப்பிட்ட தொலைபேசியில் மாலை 4 மணியளவில் பேசியது யார் என்று விசாரணை நடத்தி வருகின்றனர். (அ-ஒ)

ஈழத்தமிழர் தொடர்பான ஜெ.யின் கருத்துக்கு வரவேற்புத் தெரிவிக்கின்றார் பழ. நெடுமாறன்

மயிலாடுதுறை, ஒக்.6

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ள கருத்துகள் வரவேற்கத்தக்கன.

-இவ்வாறு உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ. நெடுமாறன் கூறியுள்ளார்.

நாகை மாவட்டம், மயிலாடுதுறையில் செய்தியாளர்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் அளித்த பேட்டியின் போதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கைப் பிரச்சினையில் அந்நாட்டு பிரதமரை அழைத்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பேச்சு நடத்த வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கருத்து வரவேற்கத்தக்கது.

இப் பிரச்சினையில் இந்திய அரசின் நிலைப்பாட்டுக்கு எதிராக தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான கட்சிகள், அமைப்புகள் கண்டனம் தெரிவித்து போராட்டங்கள் நடத்தி வருகின்றன.

ஆனால், தமிழக முதல்வர் கருணாநிதியோ இதுதொடர்பாக தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி விட்டோம்; பிரதமருக்கு கடிதம் எழுதப்பட் டுள்ளது என்று கூறிவருகிறார்.

சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காதமை ஏன்?

தமிழக மீனவர்களைக் கொல்லும் இலங்கை கடற்படையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தமிழக அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்த வேண்டும்.

உரிய நடவடிக்கை இல்லையென்றால் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்ய வேண்டும் - என்றார். (அ-ஒ)

பணக்கார எழுத்தாளர் பட்டியலில் 'ஹரி பொட்டர்' ஆசிரியர் முதலிடம்

லண்டன், ஒக்.07

ஹரி பொட்டர் கதைப் புத்தக வரிசை மூலம் 4,200 கோடி ரூபா (இலங்கை மதிப்பில்) குவித்த ஜே.கே.ரவுலிங், உலகின் பணக்கார எழுத்தாளர்களுக்கான போர்ப்ஸ் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.

உலகம் முழுவதும் பணக்கார எழுத்தாளர்களின் வரிசையை முன்னணி பொருளாதார பத்திரிகையான போர்ப்ஸ் வெளியிட்டுள்ளது. அதன்படி முதலிடத்திலுள்ள ஜே.கே.ரவுலிங் கடந்த 2007 - 2008ஆம் ஆண்டில் மட்டும் சம்பாதித்த தொகை 4,200 கோடி ரூபா (இலங்கை மதிப்பில்).

இரண்டாமிடத்தைப் பெற்றுள்ள ஜேம்ஸ் பேட்டர்சனுக்கும் ரவுலிங்குக்குமிடையே வருமானத்தில் பெரிய இடைவெளி உண்டு. பேட்டர்சனின் 2007 - 2008ஆம் வருட வருமானம் ரூபா 705 கோடி. ஸ்டீபன் கிங் ரூபா 615 கோடி வருமானத்துடன் போர்ப்ஸ் பட்டியலில் 3ஆம் இடத்தைப் பிடித்துள்ளார்.

ஜே.கே.ரவுலிங்கின் ஹரிப் பொட்டர் கதைப் புத்தகங்களில் கடைசியாக வெளியான ஹரி பொட்டரின் "தி டெட்லி ஹலோஸ்" (The Deadly Gallows) புத்தகம் மட்டும் உலகம் முழுவதும் 4.4 கோடி பிரதிகள் விற்றுத் தீர்ந்துள்ளன. அவர் இதுவரை வெளியிட்ட மொத்த தொகுதிகளில் 37.5 லட்சம் பிரதிகள் விற்பனையாகியுள்ளன. (அ-ஒ)

ஓய்வு பெறுகிறார் எலிஸபெத் ராணி!

லண்டன், ஒக்.07

இங்கிலாந்து இராணி எலிசபெத் மகாராணி ஓய்வு பெறத்திட்டமிட்டுள்ளார். இளவரசர் சார்ல்ஸை மன்னராக்க ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்து மகாராணி எலிஸபெத்துக்கு தற்போது 82 வயது. அங்கு நாடாளும்மன்ற ஜனநாயக முறையில் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டாலும் மன்னராட்சி முறைதான் நடக்கிறது.

நாடாளுமன்றத்தில் எடுக்கும் முடிவுகளுக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கும் ராணியின் ஒப்புதல் பெறவேண்டும்.

பக்கிங்ஹாம் அரண்மனையில் தங்கியிருந்து மகாராணி எலிஸபெத் அரசு தொடர்பான பணிகளை கவனித்து வருகிறார். இந்நிலையில் அவர் விரைவில் ஓய்வு பெறத்திட்டமிட்டுள்ளார்.

இதன் முதல்கட்டமாக அவர் வின்ஸ்டன் மாளிகைக்கு சென்று தங்கவும் முடிவு செய்துள்ளார். அவர் ராணி பதவியை துறப்பதை தொடர்ந்து இளவரசர் சார்ல்ஸை மன்னராக பொறுப்பு ஏற்பார். சார்லசை மன்னராக நியமிக்க ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. சார்ல்ஸ் மன்னராகும் பட்சத்தில் அவரது மனைவி கமீலாவுக்கு ராணி அந்தஸ்து வழங்கப்படும். (அ-ஒ)

ஆப்கானில் அதிரடித் தாக்குதல் 23 தீவிரவாதிகள் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் பன்னாட்டு படைகள் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் 23 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே ஆப்கானிஸ்தானில் விளையாட்டுத்துறையில் பணியாற்றி வந்த அலிகைல் என்ற உயரதிகாரி ஒரு வரது சடலம் சனிக்கிழமை வீதியோரம் மீட்கப்பட்டது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் தலிபான் பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என உயரதிகாரி ஒருவர் சந்தேகம் தெரிவித்துள்ளார். கடந்த இரு தினங்களில் ஆப்கானிஸ்தான் இராணுவம் மற்றும் பன்னாட்டு படைகள் ஆகியவை நடத்திய அதிரடி தாக்குதல்களில் 23 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடும் பயிற்சியில் கங்குலி!

சென்னை, ஒக். 07

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பான பங்களிப்பை அளிக்க இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி ஆயத்தமாகி வருகிறார்.

இதற்காக அவர் கடும் பயிற்சிகளை எடுத்து வருகிறார்.

இந்திய 'ஏ' அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்கும் இடையேயான 2 ஆவது மற்றும் கடைசி நான்கு நாள் ஆட்டம் சென்னையில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் அரங்கத்தில் துவங்கியது.

இந்திய 'ஏ' அணி சார்பில் கங்குலி மற்றும் ஆர்.பி.சிங் இருவரும் ஆடஉள்ளனர். ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிக்கான அணியில் கங்குலி மற்றும் ஆர். பி. சிங் இருவரும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சென்னையில் நடைபெற இருக்கும் நான்கு நாள் போட்டியில் கலந்து கொள்வதற்காக இருவரும் முறையே கொல்கத்தா மற்றும் பெங்களூர் ஆகிய நகரங்களிலிருந்து சென்னை வந்து சேர்ந்தனர்.

கடந்த ஒரு மாத காலமாக கிரிக்கெட் ஆடாமல் ஓய்வில் இருந்த கங்குலி சேப்பாக்கம் மைதானத்தில் சிறிது நேரம் பயிற்சி எடுத்தார். அவருக்கு இந்திய 'ஏ' அணி பயிற்சியாளர் டேவ் வாட் மோர் பயிற்சி அளித்தார்.

இடது கை துடுப்பாட்ட வீரரான கங்குலி சுமார் அரை மணி நேரம் வலைப் பயிற்சி செய்தார். அப்போது அவர் தற்காப்பு மற்றும் தாக்குதல் அடிகளை அடித்தார். சுழற் பந்து வீச்சாளர்களும் அவருக்கு பந்து வீசினர். அப்போது அவர் எல்லையை தாண்டி வந்து பெரிய அடியை அடிக்க முயன்றார்.

10 நிமிட இடைவெளிக்குப் பிறகு, கங்குலி துடுப்பாட்டப் பயிற்சியை முடித்து விட்டு பிடி எடுக்கும் பயிற்சிக்கு வந்தார். வாட்மோர் முன்னிலையில் அவருக்கு பிடி யெடுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

அவர் பயிற்சி முடித்து விட்டு வந்ததும், நிருபர்கள் அவரைச் சந்தித்த போது, நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்று கூறியவாறு காரில் ஏறி ஹோட்டலுக்குச் சென்றார்.

பயிற்சிப் போட்டி சமநிலையில்!

ஹைதராபாத், ஒக்.7

இந்தியன் கிரிக்கெட் சபை தலைவர் லெவன், ஆஸ்திரேலிய அணிகள் மோதிய நான்கு நாள் போட்டி சமநிலையில் முடிந்தது. ஆஸ்திரேலிய பந்துவீச்சை சிதறடித்த இந்தியன் லெவன் அணி தலைவர் யுவராஜ் சதமடித்து அசத்தினார். பயிற்சிப் போட்டியில் பெரிய அளவில் சாதிக்காத ஆஸ்திரேலிய அணி, ஏமாற்றம் அடைந்துள்ளது.

ஆஸ்திரேலிய அணி 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க இந்தியா வந்துள்ளது. முதல் டெஸ்ட் போட்டி வரும் 9ஆம் திகதி பெங்களூரில் தொடங்குகிறது. இதற்கு முன்னதாக ஹைதராபாத்தில் நடந்த நான்கு நாள் பயிற்சிப் போட்டியில் இந்தியன் லெவன் அணியுடன் விளையாடியது. முதல் இன்னிங்ஸில் இந்திய லெவன் 455, ஆஸ்திரேலியா 314 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய லெவன் அணி 292 ஓட்டங்களைப் பெற்றது.

ஆஸ்திரேலியா 2 இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 127 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், ஆட்டம் முடிக்கப்பட்டது. இதன் காரணமாக நான்கு நாள் பயிற்சி போட்டி [illegible] முடிந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இராணுவ நடவடிக்கையின் போது மக்களுக்கு இடிப்பு ஏற்படாதிருக்க கவனம் செலுத்துக

இலங்கைத் தூதுவரை அழைத்து இந்தியா வலியுறுத்து

புதுடில்லி, ஒக்.7

இலங்கையில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையின் போது ஆயுதம் ஏந்தாத பொதுமக்கள் கொல்லப்படுவது அதிகரித்துச் செல்வதையிட்டு இந்தியா கவலை அடைந்துள்ளது. எனவே இராணுவ நடவடிக்கையின் போது பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படாதிருக்க கவனம் செலுத்த வேண்டும்.

இந்திய மத்திய அரசாங்கத்தின் மேற்படி நிலைப்பாடு நேற்று இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

புதுடில்லியில் உள்ள இலங்கையின் பதில் தூதுவர் பாலிதகெனகொடவை தமது அலுவலகத்துக்கு நேற்று அழைத்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் இந்திய அரசின் இந்த நிலைப்பாட்டை உத்தியோக பூர்வமாகத் தெரிவித்தார்.

இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை இலங்கைக்கு உடனடியாகத் தெரியப்படுத்தும்படியும் அவரிடம் நாராயணன் கூறியுள்ளார்.

இலங்கையில் நிலைமை மோசமடைவதை அடுத்தே இலங்கைத் தூதரை நாராயணன் அழைத்து இந்தியாவின் நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தியுள்ளார் என இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கருணாநிதி பிரதமருடன் பேச்சு

இதேவேளை-

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்பாக தமிழக முதல்வர் மு.கருணாநிதி பிரதமர் மன்மோகன்சிங்கிடம் தொலைபேசியில் நேற்று கலந்து ரையாடினார்.

இலங்கையில் நடைபெறும் அந் நாட்டு அரசின் ராணுவ நடவடிக்கை, இனப் படுகொலை குறித்து முதலமைச்சர் பிரதமரிடம் விவரித்தார்.

அத்துடன் டில்லியில் உள்ள இலங்கைத் தூதரை அழைத்து தமிழினப் படுகொலை குறித்து கண்டனத் தைத் தெரிவிக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் வலி யுறுத்தினார்.

தொடர்ந்து இலங்கையில் அமைதி காண்பதற்கான நடவடிக்கைகளையும், தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் துன்பங்கள் தொடராமல் அவர்கள் பாதுகாக்கப் படுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரினார்.

இப்பிரச்சினைகள் அவசர அவசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும் பிரதமரிடம் முதலமைச்சர் கூறினார்.

இதையடுத்து முதலமைச்சரின் வேண்டுகோளை நிறை வேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதாக பிரதமர் உறுதி அளித்தார். (அ-01)

கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாச்சிக்குடா முன்னரங்க நிலையில் இருந்து சுமார் 14 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் இரு ஆட்லறித் தளங்கள் மீதே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று படைத் தரப்பில் கூறப்பட்டது. (சி)

புலிகள் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளவை வருமாறு:-

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா புலிகளின் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் மூலம் கொல்லப்பட்ட தகவல் அறிந்து நாம் மிகவும் கவலையடைகிறோம். இந்தத் தாக்குதலில் ஜானக பெரேராவை மாத்திரமின்றி இன்னும் பல முக்கிய உயிர்களையும் நாம் இழந்துள்ளோம்.

இது புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்தான் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. வடக்கில் படையினரின் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாத புலிகள் தெற்கில் பதற்றத்தை ஏற்படுத்த முற்படுகின்றனர்.

அந்த முயற்சியில் ஒன்றாகவே நாம் இந்தத் தாக்குதலைப் பார்க்கின்றோம். இவர்களின் சதித்திட்டம் தொடர நாம் அனுமதிக்கக் கூடாது. இந்த நேரத்தில் மக்கள் அமைதியாக இருக்கவேண்டும். (அ-சி)

பயங்கரவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தவை வருமாறு:-

வட மத்திய மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உட்பட 28 பேர்களின் படுகொலைக்கும் இன்னும் பலர் காயமடைந்ததிற்கும் புலிகள் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலே காரணமாகும். இதனை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இத்தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, காயமடைந்தவர்கள் துரிதமாக குணமடைய வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன்.

வடக்கில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை இழந்து பாரிய பின்னடைவுகளைச் சந்தித்து வரும் புலிகள் நாட்டின் ஏனைய பகுதிகளில் வன்முறையைத் தூண்டிவிடும் முயற்சிகளில் தற்போது ஈடுபட்டுவருகின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்கள் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும்.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா புலிகளுக்கு எதிராக வெலிஓயா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு படை நடவடிக்கைகளில் ஓர் இராணுவத் தளபதியாக இருந்து சேவையாற்றியவர் - என்றார். (அ-சி)

கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தனது உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்த ஜே.வி.பி. உறுப்பினர் வசந்த சமரசிங்கவின் வெற்றிடத்திற்கே கருணா நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று காலை 9.30 மணியளவில் நாடாளுமன்றம்சபாநாயகர்டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் கூடும்போது, சபாநாயகர் முன்னிலையில் கருணா சத்தியப் பிரமாணம் செய்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வசந்த சமரசிங்கவின் வெற்றிடத்திற்கு கருணாவை நியமித்தமை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தன்னிடம் கிடைத்துள்ளது என்று நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் தம்மிக்க இத்துல்கொட தெரிவித்துள்ளார்.

இன்று எம்.பியாகும் கருணாவுக்கு விரைவில் அமைச்சுப்பதவிகள் ஏதேனும் வழங்கப்படக்கூடும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-சி)

அரசும் கோத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜானக பெரேரா கொலை செய்யப்பட்ட சம்பவம் மிகவும் கண்டிக்கத்தக்கது. இதை யார் செய்திருந்தாலும் அதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஜானக பெரேராவிற்கு வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தல் காலத்தில் இருந்தே கொலை அச்சுறுத்தல் இருந்து வருகின்றது என்று அரச புலனாய்வுத் துறையினர் கூறியிருந்தனர்.

இதை அடிப்படையாக வைத்து அவரின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு தேர்தல் காலத்தில் இருந்தே நாம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வந்தோம். அரசு எதையும் கவனத்தில் எடுக்கவில்லை.

புலிகளிடமிருந்து மாத்திரமின்றி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளிடமிருந்தும் அவருக்கு கொலை அச்சுறுத்தல் இருந்தது. அதையும் நாம்அரசுக்குச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

அப்படியிருந்தும் திட்டமிட்ட வகையில் ஜானக பெரேராவின் பாதுகாப்பை நீக்கி அவரைக் கொலை செய்ய இந்த அரசு வழியேற்படுத்திக் கொடுத்துவிட்டது.

அரசின் இச்செயல் காரணமாக ஜானக பெரேராவை மாத்திரமின்றி 27 உயிர்களை நாம் இழந்துள்ளோம்.

ஆகவே, இந்தக் கொலைக்கான முழுப் பொறுப்பையும் அரசும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும்தான் ஏற்கவேண்டும்.

அரசு நடத்தும் இது தொடர்பான விசாரணையில் எமக்கு நம்பிக்கையில்லை - என்றார்.

அ'புரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரம் பழைய பேரூந்து நிலையத்திற்கு அருகில் உள்ள தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அலுவலகத்திலேயே இக் கோரம் நிகழ்ந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அலுவலகத்தைத் திறந்துவைக்கும் நிகழ்வுக்காக மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும், மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலரும் கூடியிருந்த வேளை காலை 8.45 மணிக்கு குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

தற்கொலைக் குண்டுதாரியொருவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவிற்கு அருகில் சென்று தன்னை வெடிக்க வைத்தார் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடமத்திய மாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சுனில் திஸநாயக்க, மாகாண சபை உறுப்பினர் ஏ.எச். அனுருதீன், அநுராதபுரம் மாநகரசபை முன்னாள் உறுப்பினர் சாந்த புஞ்சிஹேவ, முன்னாள் பிரதி மேயர் குமார பத்திரன, சடத்தரணிகள் ஏ.சி. ஹமீட், தனுஜா ராஜபக்ஷ உட்பட 27 பேர் இந்தக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திராணி பண்டார உட்பட 80 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் பலரின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளதாக அநுராதபுரம் மருத்துவமனையின் பணிப்பாளர் சரத் வீரபண்டா தெரிவித்துள்ளார்.

தெற்கில் வன்முறையைத் தூண்டும் நோக்கம் கொண்டது

விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர் என இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலே இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா விடுதலைப் புலிகளுக்கு எதிராக முன்னர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டார் என்பதாலேயே அவர் இலக்குவைக்கப்பட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தென் பகுதியில் இன வன்முறையையும், பதற்றத்தையும் உண்டு பண்ணுவதும் இத் தாக்குதலின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1966ஆம் ஆண்டு கடேற் தர அதிகாரியாக இராணுவத்தில் இணைந்த ஜானக பெரேரா, 35 வருடங்கள் இராணுவத்தில் பணியாற்றி 2001ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

1996ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளிடமிருந்து இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர், யாழ். படைகளின் பிரதான கட்டளைத்தளபதியாக ஜானக பெரேரா இருந்தார்.

யாழ்ப்பாணப் படையினர் அவரது தலைமையின் கீழ் இருந்த காலத்தில்தான் அங்கு பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசாமி யாழ். செம்மணிப் பகுதியில் வைத்து இராணுவச் சிப்பாய்களால் கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொல்ல பட்டார். அத்துடன் 1996 - 1997ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் குடாநாட்டில் எழுநூறுக்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் பிடித்துச் செல்லப்பட்டு இரக சியமாகக் கொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்ட சம்பவத்துக்கு இவரே பொறுப்பேற்க வேண்டும் என்று அப்போது பேசப்பட்டது.

எனினும் 2001இல் இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றவுடன் அவரை இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகராக்கி அங்கு அனுப்பிவைத்தது இலங்கை அரசு. அவருக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை மழுங்கடிப்பதற்காகவே - மறைக்கச் செய்வதற்காகவே - அவரை இலங்கையை விட்டு வெளியேற்றுவதற்கு அரசு உயர்பீடம் தீர்மானித்ததாக அப்போது குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

பின்னர் சிறிது காலம் இந்தோனேசியத் தூதராகவும் பணியாற்றினார் ஜானக பெரேரா. (அ-சி)

'சக்தி' ஊடகவியலாளரும் குண்டுவெடிப்பில் பலி!

கொழும்பு, ஒக். 07

ஜானக பெரேரா மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 'சிரச' தொலைக்காட்சி நிறுவனத்தின் அநுராதபுர பிராந்திய ஊடகவியலாளர் மஹ்ரூப் முஹம்மட் ரஷ்மியும் (வயது - 31) கொல்லப்பட்டார். ஐ.தே. கட்சி அலுவலகத் திறப்பு நிகழ்வுக்குச் சென்ற சந்தர்ப்பத்திலேயே இக் குண்டு வெடிப்பில் சிக்கி அவர் உயிரிழந்தார்.

அநுராதபுரம் புனித ஜோஸப் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான அவர் 2003 ஆம் ஆண்டில் இருந்து 'சிரச' தொலைக்காட்சியின் பிராந்திய ஊடகவியலாளராகச் செயற்பட்டு வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண் டுத் தாக்குதலில் ரஷ்மியின் சகோதரியும், சகோதரியின் கணவரான சட்டத்தரணி ஏ.சி.ஏ.ஹமீட்டும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் மு.கருணாநிதி மேற்கண்டவாறு எச்சரித்தார்.

இலங்கையில் நடைபெறும் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரப் பிரதமர் மன்மோகன் சிங்கும், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியும் உரிய நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என நான் நம்புகிறேன். ஈழத்தமிழர்களுக்கு நீதி கிடைக்க அவர்கள் துரிதமாக செயலாற்றுவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

"அவர்கள் ஒத்துழைப்பு நல்கினால் எங்களுக்கு வாழ்வுண்டு. அவ்வாறில்லையென்றால் ஈழத் தமிழர்கள் மட்டுமின்றி இந்தியத் தமிழர்களும் அழிவார்கள்" என்று உணர்ச்சி பொங்க ஆவேசமாக தமது உரையை முடித்தார் கலைஞர் கருணாநிதி.

ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றைக் காண்பதற்கு தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். (அ)

A/L 2009
DAY CLASS
Ta - குழந்தை
Lo - கமல்
H.c - ஜெயக்குமார்
Ge - கரன்
P.sc - தனபாலன்
Dr - மயூரன்
Acc - தவா
B.st - யசோ
Ec - சண்
ஆரம்பம்:
08.10.2008 புதன் 7a.m
யூனிவேர்சல்

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
The Jaffna Education Centre
"நாதன்ஸ்" சினிமா (முன்பாக) மேல்மாடியில்
Spoken English with Grammar
"சிங்களம்"
Short hand typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம் 08.10.2008
வெளிநாடு செல்பவர்களுக்கு ஆங்கிலம் இலகுவாக எழுத, வாசிக்க, பேசக் குறுகிய காலத்தினுள் கற்றுக் கொடுக்கப்படும். பாடமுடிவில் "சான்றிதழ்" வழங்கப்படும்.
நிர்வாகி:- இ.லோகநாதன்

எழுதுனர் படிவம் விற்பனையாகிறது
கமநல சேவையின் எழுதுனர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்
தகைமை - O/L
முடிவுத்திகதி - 15.10.2008
பூபாலசிங்கம் புத்தக சாலை
இல, 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

RAM COMMUNICATION
* உள்நாட்டு வெளிநாட்டுக்கான கடிதங்கள், VCD மற்றும் பொதிகள் (10kg) போன்றவற்றிற்கு விசேட விலைக் கழிவுகளுடன் பாதுகாப்பாக அனுப்பிக் கொடுக் கப்படும்.
* மணித்தியாலத்திற்கு குறைந்த கட்டணத்தில்.
* வெளிநாடுகளில் உள்ளவர்களுடன் நேருக்கு நேராக முகம் பார்த்துக் கதைப்பதற்கு நாடவேண்டிய ஒரே இடம்
Inter net Browsing
RAM COM
வேறு இதர சேவைகளான:- Inter net Call, IDD, Lamination, Photo Copy, Printing, E.Mail, Computer Typing, Local Call.
E.Mail:- Ramcom@Yahoo.com
Ramcom2008@hotmail.com
Tel:- 021 222 8428, Fax- 021 222 2007
இல-6, ஆஸ்பத்திரி வீதி, New Market, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org